போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

# திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 20—2—55 | இதழ் 33

## அந்த மகத்துவம் அறிவீரோ?

யார் இவர்கள்? எங்கிருந்து வந்தார்கள்? எப்படி உண்டாயிற்று இத்தத் துணிவு?

பத்திரிகைகளில் முழுப்பக்க அளவு தலைப்புக்கொடுத்து ஒரு அபாண்டத்தை முழு உண்மையென்று மக்கள் நம்பும் வகையில் வெளிடச் செய்த இந்த விவேகமற்றவர்கள் யார்?

''அவர்'' இப்போதில்லை என்ற தைரியத்தைத் தவிர, இவர்களுக்கு வேறு ஆதாரமேது இதனைக் கூற?

அதிலும் காலவரையறையோடு ஒரு பொய்யை மெய்யெனப் புளுகும் இந்தப் புல்லர்கள் எந்தப் பல்கலைக் கழகத்தில் பயின்று அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஒத்துவராத — ஆண்டவன் அருளுக்கு அப்பாற்பட்ட இந்த ஆராய்ச்சியைச் செய்தார்கள்?

காலப்போக்கால், இதனை மட்டுமல்ல இதைவிடப் பன்மடங்கு மோசமான காரியங்களைக் கூடச் செய்யலாம்—கேட்பாரெவர் என்ற மண்டைக் கர்வமல்லாது இதனை வேறென்னவென்று கூறுவது?

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் ஒரு பேருண்மையை மறைக்கவோ மறுக்கவோ இவர்கள் யார்?

மிலேச்ச மொழியான ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டு சிலர் இது போன்ற அருள்நெறிக்குப் புறம்பான ஆராய்ச்சிகளைச் செய்வதை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பொறுத்துக்கொண்டிருப்பது?

இப்படிப்பட்ட இழிவான காரியங்களைச் செய்வதற்குத்தான் போலும் ஆங்கிலம் இன்னும் ஐம்பதாண்டுகளுக்காவது இங்கிருக்கவேண்டுமென்று விவஸ்தையற்ற சிலர் விவேகமற்றுக் கூறுகிறார்கள்!

பாழாய்ப்போன ஆங்கிலத்தால் நம் நாட்டுக்கு ஏற்பட்ட பலவித கெடுதல்களில் இந்த ஆராய்ச்சி முறையும் ஒன்று என்று கூறினால், அதனை ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமான அன்பர்கள் யாரார்தான் மறுக்க முடியும்?

ஆ! அந்தப் பெயர்!! நினைக்கும் போதே நெஞ்சை அள்ளுகிறது. நினைவு தடுமாறுகிறது. அஞ்ஞானம் அகல்கிறது. மெஞ்ஞானம் நுழைகிறது!! என்னே! என்னே!! எம்பிரான் இட்ட பெயரின் மகத்துவம்!!

இப்படிப்பட்ட அருளே ஒரு வடிவமாய் அமைந்துள்ள இந்த அற்புதமான பெயருக்குக் கேவலம் சில மனிதப் பதர்கள் இழுக்குத்தேட முயல்கின்றனர் என்றால், அவர்தம் அறியாமையை எது கொண்டு அளந்தறிவது என்பதறிகிலேம்!

அழியுமாம் இந்தப் பெயர்! ஆழ்கடலில் மறையுமாம் அரனைப் பூசித்த அரியால் இடப்பட்ட பெயருள்ள இந்த இடம்! தவறு தவறு!! ஸ்தலம். இன்னும் மூன்றாண்டுகளில் முழுகிவிடுமாம் கடலுக்குள்!

இப்படி அறிவிக்கின்றனர் சிலர். என்ன பேதைமை இவர்களுக்கு! இப்படிப்பட்ட பிரகஸ்பதிகளை நிபுணர்கள் என்று வேறு அழைக்கிறார்கள்.

இந்த நிலையற்ற நிபுணர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, சர்க்காரும் தலைவிரித்தாட ஆரம்பித்திருப்பதைப்பார்த்தால், இப்படிப்பட்ட அவசர கோலச் சர்க்காரை நம்ம சர்க்கார் என்று கூறவே கூச்சமும் வேதனையுமாக இருக்கிறது.

இந்த அப்பாவி நிபுணர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு சர்க்கார் ஒரு கமிஷனை வேறு நியமித்திருக்கிறதாம்!

அந்தக் கமிஷன் தென் ரயில்வே பிரதம எஞ்ஜினியரான தோழர் கணபதி அவர்கள் தலைமையில் 13—2—55-ல் அந்தப் புண்ணிய பூமியில் கால் வைத்துப் பலஇடங்களைச் சுற்றிப் பார்த்ததாம்.

*

தனுஷ்கோடி! இது ஈழத்தையும் திராவிடத்தையும் இணைக்கின்ற இடத்தில் இருக்கின்ற ஒரு சிறிய ஊர். ஊர் என்றால், பழங்காலந்தொட்டே மக்கள் வாழும் இடமாக அமைந்த ஒரு நிலப்பரப்பல்ல. எந்த நேரத்தில் அழிந்துபடுமோ என்ற நிலைக்கு இலக்காகி உள்ள ஒரு நிலை பேறற்ற நிலப்பரப்பு. எனவேதான் இந்த இடத்தை அந்தக் கால மக்கள் தங்கள் வாழும் இடமாக ஆக்கிக்கொள்ளவில்லை. கடல் பெருக்கெடுத்தால் கண நேரத்தில் இல்லாது மறையும் இயல்பினதான அந்த இடத்தை யாது காரணத்தாலோ ஈழத்தையும் திராவிடத்தையும் இணைக்கும் இடமாகத் தென் இந்

தியஇரயில்வேக் கம்பனியார் செய்து விட்டனர். இப்போது அந்த இடத்தைப் பரிசீலனை செய்த நிபுணர்கள் இன்னும் மூன்றாண்டுகளில் அந்த இடம் கடலுள் மூழ்கிவிடும் என்று அறிவித்துள்ளனர் — இல்லை—எச்சரித்துள்ளனர். இந்த நிபுணர்களின் அபிப்பிராயத்தை அடிப்படையாக வைத்துத்தான், இங்கிருந்துஇலங்கை செல்ல வேறு வழி காணவேண்டுமென்று மத்திய சர்க்கார் ஒரு கமிஷனை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், வைதிகத்தின் பிடியில் அகப்பட்டுத் தவிக்கும் பக்தகோடிகளுக்கு இது ஒரு பேரிடியாகவே அமைந்துவிட்டது.

தனுஷ்கோடியைக் கடல் விழுங்கி விட்டால் கருணைக் கடலாம் கடவுளின் மகத்துவம் என்னாவது என்ற ஏக்கம் எப்படி இருக்கும் என்பதன் விளக்கமே நாம் மேலே தீட்டியிருப்பது.

தனுஷ்கோடி—அழியாது — இது பக்த கோடிகளின் பலமான நம்பிக்கை.

தனுஷ்கோடி — அழிந்துவிடும் — இது நிபுணர்களின் அசைக்க முடியாத ஆராய்ச்சி முடிவு.

தனுஷ்கோடி — இது கோடி வில்கள் என்று பொருள்தந்து ஸ்ரீ புருஷனும் இராமனைக் குறித்து நிற்கும் ஒரு அருட்பெயர் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

தனுஷ்கோடி—இது கடல் அரிப்புக்கு இலக்காகி, எந்த நேரத்திலும் கடலால் விழுங்கப்படக் கூடிய நிலையில் இருக்கும் ஒரு ஆபத்தான இடம் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

தனுஷ்கோடி-இது இராமபிரானுடைய வில்முனையால்உண்டாக்கப்பட்ட புண்ணிய தீர்த்தம் இருக்கும் இடமாகையால் இதற்கழிவே கிடையாதென்பது பக்த சிகாமணிகளின் சீரிய நம்பிக்கை.

தனுஷ்கோடி—இது அழிய அதாவது கடலால் மூழ்கடிக்கப்பட இன்னும் மூன்றே ஆண்டுகள்தான் உள்ளன என்பது நிபுணர்களின் நிச்சயமான முடிவு.

இப்படியாக நிபுணர்களுக்கும் பக்தகோடிகளுக்கும் இடையே அகப்பட்டு அவதிப்படும் தனுஷ்கோடியைப்பற்றி எண்ணும்போது நமக்கே கூடப் பரிதாபம்தான் ஏற்படுகிறது, இப்படி அவதிக்காளாகும் ஒரு இடம் திராவிடத்தில் இல்லாமலிருந்தால் கூட நல்லதென்று தோன்றுகிறது.

இப்பரந்த உலகிலே நீராலும், நெருப்பாலும், காற்றாலும் ஏற்படும் அழிவுகள் ஏராளம். இயற்கையால் ஏற்படும் இந்த அழிவுகளைத் தடுக்க ஆண்டவனைத் துணைக்கழைத்து இதுவரை யாரும் வெற்றி பெற்றதில்லை—பெற முடியாது.

ஆனாலும், அழிந்துபட இருக்கும் தனுஷ்கோடியை ஆண்டவன் காப்பாற்றிவிடுவார் என்ற நம்பிக்கையை மக்கள் இழக்கவில்லை என்று ஒருபத்திரிகை கூறுகிறது.

> "இராமேஸ்வரக் கடற்கரையிலுள்ள கோயிலில் ஸ்ரீ இராமநாத ஸ்வாமி இருக்கும் வரையில், சமுத்திரம் மரியாதையுடன் தூரத்திலேயே இருக்குமென மக்கள் நம்புகின்றனர்"

இப்படியொரு நம்பிக்கைச் செய்தியை ஒரு பத்திரிகை மக்களுக்கு, அல்ல, அல்ல, பக்தர்களுக்குத் தந்திருக்கிறது.

ஆனால், அதேபத்திரிகை இன்னொரு செய்தியையும் மக்களுக்கு (பக்தர்களுக்கல்ல) தந்திருக்கிறது. தனுஷ்கோடியின் நிலைமையையும், அதுபற்றி அங்குள்ள மக்கள் கொண்டுள்ள கருத்தையும் அறிவதற்காக அண்மையில் பத்திரிகைக் கோஷ்டியொன்று அங்குசென்றதாம். அது சமயம் பத்திரிகைக்காரர்கள்,

> "அங்குள்ள மக்களிடையேயும் மதகுருக்களிடையேயும் ஒரு விதமான நம்பிக்கை இழந்த நிலை நிலவி வருவதை உணர்ந்தனர்"

என்ற செய்தியையும் வெளியிட்டிருக்கிறது.

தனுஷ்கோடியில் வாழும் மக்களின் நம்பிக்கையிழந்த நிலைமையை முதலில் கூறியபத்திரிகையே, கடைசியில், சமுத்திரம் மரியாதையுடன் தூரத்தில் விலகியிருக்கும் என்று மக்கள் நம்புகின்றனர் என்பதாகவும் கூறுகிறதென்றால், அதன் நிலை எவ்வளவு இரங்கத்தக்கதாக இருக்கிறதென்பதை எண்ணிப்பார்க்கும் எந்தக் கன்னெஞ்சினர்க்கும் ஒரு தனி இரக்கம் ஒரு விநாடியாவது உண்டாகாமற் போகாது.

பக்தர்களின் மனமும் பதறிப் புண்படக்கூடாது; அதே சமயத்தில் நிபுணர்களின் கருத்துக்கும் மதிப்புத் தரவேண்டும் என்ற சங்கடமான நிலையில், தனுஷ்கோடியைப் பற்றிய செய்தியை அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. நம்முடைய அனுதாபம் அதற்கு உரித்தாகட்டும்.

இன்னும் சிறிது காலம் போனால், அந்தப் பத்திரிகைக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே ஒரு தெளிவு உண்டாகிவிடும். அதாவது இந்த இரண்டும் கெட்டான் நிலை மாறிவிடும். எதையும் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வரும் தெளிவு ஏற்பட்டுவிடும்.

நாம் இப்படிக் கூறுவதால் அவர்களுக்கு இப்போது தெளிவில்லை என்று கேவலப் படுத்துவதாகாதா என்று சிலர் கருதலாம். நிச்சயமாக இன்னும் அவர்களுக்குத் தெளிவு ஏற்படவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். காரணம் நூறு கூறலாமாயினும், தனுஷ்கோடியைப் பற்றிய இந்தச்செய்தியிலேயே இரண்டொரு சம்பவங்களை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

> "நாற்பது ஆண்டுகளாக மக்களுக்கு உதவிபுரிந்துவந்த ஒரு ஆஸ்பத்திரியைக் கடல் விழுங்கி விட்டது"

இது அந்தப் பத்திரிகை தரும் செய்திகளில் ஒன்று.

ஆண்டவனுக்குப் பயந்து சமுத்திரம் மரியாதையுடன் தூரத்திலேயே இருக்கும் என்ற செய்தியையும் தந்து, அதேபோது, மக்களுக்கு 40-ஆண்டுகளுக்கு மேலாக உதவிபுரிந்த ஆஸ்பத்திரியைக் கடல் விழுங்கிவிட்டதென்றசெய்தியையும் அந்தப் பத்திரிகையே தருமானால், அது, தெளிவு பெற்ற நிலையில் நின்று மக்களுக்குச் செய்திகளைத் தந்து உதவுகின்றதென்று எப்படிக் கூறமுடியும்?

இதுமட்டுமல்ல, கடந்த பத்தாண்டுகளில் சுங்க இலாகாச் சிப்பந்திகளின் வீடுகளையும், கடவுளிடம் மரியாதையாக நடந்துகொள்வதாக எதிர்பார்க்கப்படும் அந்தச் சமுத்திர பகவான் விழுங்கி விட்டாராம். மேலும் அந்தக் கடல்தேவன் அங்கு வாழும் ஏழைப் பரதவர்களை அவ்வப்போது இடம் பெயரும்படியான திருவிளையாடலையும் செய்து கொண்டிருக்கிறாராம்.

"கடலையே நம்பிவாழும் பரதவர்கள் சமுத்திர பகவானின்

SANKARAN PROGRESSIVE TUTORIALS TIRUCHI

**திருச்சி கருணாநிதிப் பூங்கா, சங்கரன் முன்னேற்றத் தனிப்பயிற்சிக் கூடம்**

20—2—55 ஞாயிறு மாலை 4-மணிக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் "திருக்குறள்" பற்றி புதிய உரை தருவார்கள். இரவு 7-மணிக்கு திரு. எம். கே. கோவிந்தராஜபாகவதர் தம் குழுவினருடன் பாரதிதாசன் பாடல்களைப் பாடுவார். (ஒலிபெருக்கி உண்டு.)

திடீர் கோபத்தைக் கண்டு தங்கள் குடிசைகளைத் தள்ளி அமைத்துக்கொண்டே வருகின்றனர்''

என்ற போதிலும், கடலரசன் கடவுளுக்கு மரியாதை காட்டி நடந்துகொள்வார் என்று மக்கள் நம்புகின்றனராம்!

*

சுங்க அதிகாரிகள்—இவர்கள் அநியாயமாக மக்களின் பொருள்களுக்கு வரி வசூலிக்கும் கொடுமையைச் செய்கிறார்கள்; எனவே சமுத்திரபகவான் கடவுளுக்கு மரியாதைகாட்டி நடந்துகொள்வதே முறை என்ற சாஸ்திரத்தைக் கடைப்பிடித்து இவர்கள் குடியிருக்கும் இடங்களை விழுங்கிவிடுகிறது.

பரதவர்கள்—இவர்கள் பகவானின் படைப்பான மச்சாவதாரங்களையெல்லாம் கொன்று பக்தர்களுக்கும் பிறர்க்கும் விற்றுப் பிழைக்கும் பெரும் பிழை செய்பவராதலால், இவர்களையும் அந்தப் புண்ணிய பூமியில் வாழவிடுவது அடாதென்பதை, உப்புநீருத்தமன் ஆண்டவனுடைய அருட்டிறத்தால் உணர்ந்து நிலைபெயரச் செய்யும் நிரந்தரமான காரியத்தைச் செய்கிறார்.

இவை சமுத்திர பகவான் கடவுளிடம் மரியாதையுடன் நடந்து கொள்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும் என்று சிலர் கூறலாம்—வாதத்துக்கு! அல்ல — அல்ல விதண்டா வாதத்துக்கு!

ஆனால், இந்தச் சிறு தொகையினரான சுங்க அதிகாரிகளையும், பரதவர்களையும் பார்க்கிலும் பெருந்தொகையாகவுள்ள வேறு சிலரும் அங்கு வாழ்கிறார்களாம் இவர்கள் யார் தெரியுமோ?

கடவுளின் அனந்தம் பெயர்களில் இரண்டுபெயர்களைத் தாங்கி, ஏதோ பூர்வஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனாகவோ அன்றிப் பாவத்தின் விளைவாகவோ பூமியில் உலாவுபவர்கள்.

ஒரு பகுதியினரைப் பிச்சைக்காரர்கள் என்றும், இன்னொரு பகுதியினரைச் சாமியார்கள் என்றும் அழைக்கிறார்களாம். இவர்களின் எண்ணிக்கைதான் தனுஷ்கோடியில் அதிகமாம்.

ஜடாமுடியோடு கூடிய சாமியார் வடிவத்திலும், மண்டை ஓட்டைக் கையில் ஏந்திய வண்ணம் பிச்சை எடுக்கும் வடிவத்திலும் பக்தகோடிகளுக்குத் தரிசனமளித்து வரமருளுவதில் ஆண்டவனுக்கு அலாதியான ஒரு ஆசையாகும். இது நாம் கூறுவதல்ல — புராணங்கள் புகலும் உண்மைகளில் ஒன்று.

இப்படிப்பட்ட கடவுளவதாரங்கள் அல்லதுகடவுளின் மறுவடிவங்களாகக் காட்சியளிக்கும் பிச்சைக்காரர்களும் சாமியார்களுமே பெருந்தொகையாக வாழும் இடமான தனுஷ்கோடியை இன்னும் மூன்றாண்டுகளில் கட்டாயம் கடல் கபளீகரம் செய்யப்போகிறது. இதற்கென நியமிக்கப்பட்ட நிபுணர்களும், தனுஷ்கோடியிலுள்ள சர்க்கார் அதிகாரிகளும் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

தனுஷ்கோடியிலுள்ள இரயில்—கப்பல் இணைப்புத்துறையை வேறு இடத்துக்குக் கட்டாயமாக மாற்றியாக வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனராம்.

நிலைமை எப்படியிருந்தாலும், தனுஷ்கோடி எந்தக் காரணத்தைக் கொண்டும் அழியாது — மறையாது என்ற நம்பிக்கையோடுள்ள மக்களுக்கு, அதாவது பக்தர்களுக்கு இன்னொரு திகிலும் ஏற்பட்டிருக்கிறதாம். அதாவது, ஒரு வேளை சமுத்திரபகவான் தனுஷ்கோடியை விழுங்கிவிட்டால், அதனையடுத்துள்ள இராமேஸ்வரம் என்ற பெரிய கோயிலுக்கும் ஆபத்து ஏற்பட்ட மாதிரிதானாம். அதாவது இராமேஸ்வர தரிசனத்தின் பலன் தனுஷ்கோடியில் ஸ்ரீ இராம பிரானுடைய வில் முனையால் உண்டாக்கப்பட்ட தீர்த்தத்தில் முழுகினால் தான் பூர்த்தியாகுமாம். இல்லையேல் இராமேஸ்வர தரிசனத்தால் யாதொரு பயனும் இல்லையாம். இதனையும், அந்தப் பத்திரிகைதான் நமக்கு அறிவிக்கிறது.

''தனுஷ்கோடியில் ஸ்நானம் செய்யாமல் இராமேஸ்வர யாத்திரை பூர்த்தியாகாது''

இது, அந்தப் பத்திரிகை தரும் ஸ்தல புராணசாரம். இன்னும் மூன்றாண்டுகளில், அதாவது, தனுஷ்கோடியைக் கடல் விழுங்கிய பிறகு, இராமேஸ்வரத்துக்கு யாத்திரிகையாக வருபவர்கள், தங்கள் யாத்திரை பூர்த்தியாகாது திரும்ப நேரிடும். அதாவது, இராமேஸ்வர யாத்திரையால் ஏற்படுவதாகச் சொல்லப்படும் பிள்ளை வரம் முதலான பல திறப்பட்ட பலன்களை அவர்களால் நுகர்ந்து இன்புற முடியாது. எனவே தனுஷ்கோடி கடலால் விழுங்கப்படாதிருக்க வேண்டும்—இது பக்தர்களுடையவும் பக்தர்களுக்காகப் பரிந்து பேசுபவர்களுடையவும் நீக்கமுடியாத ஆசையாகும். ''ஆலமரத்தைப் பிடித்த பேய் பிள்ளையாரையும் சேர்த்துப்பிடித்து விட்டது'' என்று சொல்லப்படும் வைதிகர்களின் பழமொழிக்கு அவர்களே இலக்காகி நிற்பதைக் காண நமக்கும் அவர்கள் பால் பரிதாபம்தான் உண்டாகிறது. தனுஷ்கோடியைக் கடல் விழுங்குவதால், அதனையடுத்துள்ள இராமேஸ்வரத்துக்குமன்றோ ஆபத்து ஏற்பட்டுவிடுகிறது! அம்மியே ஆகாயத்தில் பறக்கிறது என்றால் ஆலஞ்சருகு எம்மாத்திரம்? இதனை ஊன்றிக் கவனித்து உண்மையை உணரும் பக்தகோடிகள் எவ்வளவு வேதனைப்படுவார்கள் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்த்ததன் பயன்தான், தனுஷ்கோடிக்கருகாமையில் இராம நாதஸ்வாமி கோயில் இருக்கும் வரையில், சமுத்திர தேவன் மரியாதையுடன் தூரத்திலேயே இருப்பான் என்று அந்தப் பத்திரிகை மக்களை நம்பும்படி செய்வதில் தன்னையும் மிஞ்சிய பெரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. இல்லையேல் புராணகாலப் புளுகுமணிகள் எல்லாம் அதனிடத்தில் பிச்சைவாங்குமளவுக்குத் தனது அபத்தக் கருத்துக்களை வெளியிடுமா?

''கோடிக்கணக்கான நதிகள் இந்தச் சமுத்திரத்தில் கலப்பதால் இதில் ஸ்நானம் செய்பவர்களுக்கு எல்லாப்பாபமும் நீங்கும்''

என்று கூறும் அந்தப் பத்திரிகை அதோடு திருப்தியடையமனமில்லாமல்,

''தனுஷ்கோடி பாடல் பெற்ற ஸ்தலம். எனவே, அது கவிஞர்களின் சொர்க்கலோகம்''

என்று கூறுவதன் வாயிலாகப் புளுகு மலையின் உச்சியில் போய் நின்று கொண்டு ஓங்காரக் கூச்சல் போடுகிறது.

தனுஷ்கோடியில்கோடிக்கணக்கான நதிகள் வந்து கலக்கின்றனவாம், ஒன்றல்ல, பத்தல்ல, நூறல்ல, ஆயிரமல்ல, இலட்சமல்ல, கோடியல்ல; கோடிக்கணக்கான அதாவது பல கோடி நதிகள், இராமனுடைய கோடி வில்கள் சேர்ந்து தனுஷ்கோடி ஆனது போல், கோடிக்கணக்கில் வந்து கலப்பதால் அந்த இடம் பாபங்களையெல்லாம்

(16-ம் பக்கம் பார்க்க)

### ஒரு 'ஆனந்தன்!'

கோலாலம்பூர், ஜன 7—ஒரு இந்தியர், கோடரி, இருப்புக் கம்பிகள் சகிதமாக, சுங்கை பெசி ரோட்டுச் சிவன் கோவிலுக்குள் சென்று அங்கிருந்த தெய்வச் சிலையை உடைத்தெறிந்துவிட்டார்.

தெய்வத்தின்மீது பழி தீர்த்துக் கொள்வதற்காகவே இவ்வாறு செய்ததாக அவர் சொன்னாராம்.

தன்மீது மனஸ்தாபம் கொண்டிருக்கும் தன் மனைவி, தன்னுடன் ராசியாகிவிட அருள்புரியுமாறு சில மாதங்கட்கு முன்தான் பிரார்த்தனை செய்திருந்ததாகவும் அவர் கூறினாராம்.

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

**பதினாறாவது நூற்றாண்டு**

மக்கியவல்லியின் காலத்துக்குப் பின் பதினாறாவது நூற்றாண்டின் முதற்பாதியில் ஐரோப்பா முழுவதும் அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் புதிய கருத்துக்கள் தோன்றின. 'சீர்திருத்தம்' என்ற பெயரால் கிருஸ்துவ மத அமைப்பில் மாற்றங்காண புறப்பட்டனர் பலர்.

கிருஸ்துவ மத பரிபாலனத்தில் குறைகளில்லாமலில்லை. ஆனால் இந்தக் குறைகள் பதினாறும் நூற்றாண்டில்தான் புதிதாக தோன்றினவையல்ல. அதற்கு முன்னேயும் அவைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் அவைகளுக்கு இப்பொழுது புதிய முக்கியத்துவம் கொடுத்து புரட்சிகரமான மாறுதல் தேவை என்று சொல்லுவதற்கு வேறு பல காரணங்கள் இருந்தன.

மொழிப் பற்றும் அதையொட்டி இனப் பற்றும், தனித்து வாழ வேண்டுமென்ற சுதந்திர தாகத்தால் ஏற்பட்ட நாட்டுப் பற்றும் இவைகளெல்லாம் சேர்ந்து 'போப்' என்ற மதத் தலைவரின் ஆதிக்கத்தை அகற்ற வேண்டுமென்ற எண்ணந்தான் இந்த மதப் புரட்சிக்கே அடிகோலியது.

அதுமட்டுமல்ல, பண்டைய ரோம சாம்ராஜ்யம் அழிந்துவிட்டாலும், அதன் வாரிசாக நினைத்துக்கொண்ட புனித ரோம சாம்ராஜ்யம் என்ற ஒரு ஸ்தாபனம் ஐரோப்பாவில் இயங்கிக்கொண்டு கிருஸ்துவ நாடுகளெல்லாம் அதற்கு அடங்கி நடக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தது. போப்பினுடைய அதிகாரத்துக்கு எதிர்ப்பும் அத்துடன் புனித ரோமசாம்ராஜ்யத்தின்மேல்வெறுப்பும் வளர்ந்து வந்தது.

'மத சீர்திருத்தம்' லூத்தர், கால்வின் போன்ற தனிப்பட்டவர்களால் முதலில் துவக்கப்பட்டாலும், பிறகு ஆங்காங்கே ஆட்சி புரிந்து வந்த மன்னர்கள் அதற்கு ஆதரவு தந்து அதை வளர்த்துவிட்டனர். போப்பினுடைய அதிகாரத்தை மதத் துறையில் எதிர்த்துப் போராடும் சீர்திருத்தவாதிகளின் கிளர்ச்சியை ஆதரித்தால் போப்பின் செல்வாக்கு குறையும் அதனால் சுலபத்தில் போப்பினுடைய தலையீடும், புனித ரோம சாம்ராஜ்யத்தின் பாத்தியதையும் தொலையும் என்ற எண்ணந்தான் மன்னர்கள் இந்த இயக்கத்துக்கு பக்கபலமாக இருப்பதற்கு காரணமாயிருந்தது.

"ஒவ்வொரு அரசும் பிறருடைய தலையீடின்றி வாழ உரிமைவேண்டும். மதஸ்தாபனம் எப்படி கடவுளால் ஏற்பட்டதோ அப்படியேதான் அரசு ஏற்பட்டது. அரசும் கடவுளுக்குத்தான் கட்டுப்பட்டதே தவிர எந்த மதஸ்தாபனத்திற்கும் அடங்கினதல்ல. அரசின் தலைவனாகிய மன்னன் மதத் தலைவ்ரான வேறொருவருக்கு கீழ் பட்டவனல்ல." லூத்தரின் அரசியல் கருத்துக்கள் இவை. இவை மன்னரின் கையைப்பலப்படுத்தி மக்களின் சுதந்தரத்தைப் பறிப்பதற்குச் சாதகமாய் இருந்தன. கடவுளால் நியமிக்கப்பட்ட காரணத்தைக்காட்டி மன்னன் தனக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று கூறிய மதஸ்தாபனத்தின் ஆதிக்கத்தை அழிக்க நினைத்தான் லூத்தர் 'மன்னனும் கடவுளால் நியமிக்கப்பட்டவனே' என்ற கருத்தை வெளியிட்டார். ஆனால் லூத்தருக்குப்பின் இந்தக்கருத்து வேறு வழியில் திருப்பிவிடப்பட்டு மன்னன் கடவுளின் பிரதிநிதி, ஆகவே எவரும் மன்னனை எதிர்க்கவோ, கண்டிக்கவோ குறை கூறவோ கூடாது, அப்படிச் செய்தால் அது கடவுளையே அவமதித்ததாகும் என்ற அடிப்படையில் தெய்வீக உரிமைக்கொள்கை என்ற புதுக்கொள்கை அரசியலில் தோன்றக் காரணமாயிருந்தார் லூத்தர். சுதந்தரம் பிறப்புரிமை; என்று கூறிக் கொண்டு மக்கள் மன்னனை எதிர்ப்பது கடவுளையே எதிர்ப்பதாகும் என்ற அவருடைய கருத்துக்கள் மன்னனின் சர்வாதிகாரம் வளருவதற்கும், மக்களை மன்னவன் துச்சமாக நினைக்கவும் நடத்தவும் வழி செய்தன.

16வது நூற்றாண்டின்பிற்பகுதியில் Jesuit என்ற இயேசு சபையைச் சேர்ந்த பெல்லார்மின் போன்ற அறிஞர்கள் தோன்றி, 'சீர்திருத்தம்' என்று ஆரம்பித்து முடிவில் மன்னர்களைப் பலப்படுத்திய லூத்தரின் கொள்கைகளை எதிர்த்தார்கள்.

**இயேசு சபை**

"சமூக அமைப்பு என்பது மனிதத்தேவைகளின் அடிப்படையில் தனி மனிதன் சுதந்தரத்தைக் காப்பாற்றவும், சமாதானத்தை நிலைபெறச்செய்யவுமே ஏற்படுத்தப்பட்டது. ஆகவே எந்தச் சமூக அமைப்பிலும் முடிவான அரசியல் அதிகாரம் மக்களின் கையில்தான் இருக்கவேண்டும். ஆட்சிப் பொறுப்பு அரசனிடம் இருந்தாலும் அவன் மக்களிடமிருந்துதான் அதிகாரத்தைப் பெறுகிறான், அதனால் அவர்கள் விருப்பத்துக்கு அடங்கி நடக்க கடமைப்பட்டவனேயல்லாது தன் இச்சைப்படி நடக்கலாம் என்று அவன் நினைப்பது தவறு, மக்கள் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்த மன்னனை ஒரு கருவியாகத்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களாகக் கொடுத்த ஒரு அதிகாரத்தை அவர்கள் வேண்டும்போது பறித்துக்கொள்ளவும் அவர்களுக்கு உரிமையுண்டு" என்ற கருத்துக்களை பெல்லார்மின், மேரியானா என்ற இயேசு சபை அறிஞர்கள் வெளியிட்டது தெய்வீக உரிமைக்கொள்கையின் செல்வாக்கைக் குறைக்க உதவியது.

மதஸ்தாபனத்தைப்பற்றி அவர்கள் குறிக்கும்போது அதுதான் தெய்வீகத் தன்மையுடையதென்றும் மனிதத் தன்மையுடைய அரசுக்கு அது அடங்கினதல்லவென்றும், எனவே மன்னன் அதில் தலையிடுவது தவறென்றும், கருதினார்கள்.

மன்னனுடைய அதிகார வரம்பைப் பற்றி அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் எல்லாராலும் ஒப்புக்

கொள்ளப்பட்டது. ஸ்காட்லாந்தில் தோன்றிய நாக்ஸ், **புச்சனன்** போன்றவர்கள் அத்து மீறி நடந்தால் மன்னனை எதிர்க்க மக்களுக்கு உரிமையுண்டு. பிள்ளைகள் தங்களுக்கு எவ்வளவு அடங்கியிருக்க வேண்டுமென்று பெற்றோர்கள் எதிர்பார்க்கலாமோ அவ்வளவுதான் மன்னனும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கலாம்" என்றனர். மக்கள் நம்பிக்கையை இழந்த மேரி ராணியை சிம்மாசனத்தை விட்டு இறக்கியது முறையானதே தவிர தவறானதல்ல என்று வாதாடினார் புச்சனன்.

மன்னராட்சியைக் கண்டித்து எழுதியவர்களில் மற்றொருவர் **ஆல்தூசியஸ்** என்பவர். அவர் ஹாட்மென் போன்றவர்களைப் பின்பற்றி அரசியல் ஒப்பந்தக் கொள்கையை ஆதரித்தார். "மக்களுக்கும் மன்னனுக்கும் ஒப்பந்தம் உண்டு" என்று சொல்லுவதோடு நில்லாது, மன்னன், மதத்தலைவர்கள், பிரபுக்கள், நகரங்களின் பிரதிநிதிகள் இவர்களடங்கிய ஒரு சபையே மன்னர் சபையாகும். முடிவான அதிகாரம் இதன் கையிலேயே இருக்கவேண்டும் என்றார்.

**இருமுனை**

இவ்வாறு அரசர்களுடைய அதிகாரம் அதிகரிக்க வேண்டுமென்று விரும்பியவர்கள் ஒரு புறமும், அந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று விரும்பியவர்கள் மறுபுறமும், முடிவான அதிகாரம் மன்னன் கையில்தான் இருக்கிறது என்போர் ஒரு பக்கமும், அந்த அதிகாரம் மக்கள் கையில்தான், மன்னன் மக்களுடைய ஏவலாளேயன்றி எஜமானல்ல என்று கூறியவர்கள் மறுபக்கமுமாக ஐரோப்பாவில் 16-வது நூற்றாண்டின் பிற்பாதியில் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மதம் பற்றிய சச்சரவுகளும் அரசியல் கருத்து வேறுபாடுகள் மற்ற நாடுகளைவிட பிரான்சில் மும்முரமாகக் காணப்பட்டன. நாட்டின் நிலைமையைக் கண்டு போடின் என்ற பிரெஞ்சு அறிஞர் மக்கியவல்லியைப் போலவே நாட்டைச் சீர்திருத்த பலம் பொருந்திய மன்னன் தேவை என்ற முடிவுடன் அவர் தன் கருத்துக்களை வெளியிட்டார். "அரசு அல்லது ராஜ்யம் என்பது எல்லோருக்கும் பாத்தியதை உடைய பொதுச் சொத்துக்களுடன் சேர்ந்து வாழும் பல குடும்பங்கள் ஒரு மன்னனுக்கடியில் அறத்தின் வழி ஆளப்படுவதே" என்றும், பிரஜைகளின் நல்வாழ்வே அரசின் நோக்கமாக இருக்கவேண்டும், இயற்கைச் சட்டத்தின்படி நடந்தால்தான் அறத்தின் வழி ஆட்சி புரியமுடியும்; செயல்களை சரியானது எது தவறானது எது என்று பிரித்துக் காட்டுவதே இயற்கைச் சட்டம். சர்வதேசச் சட்டங்களைக் கூட ஒரு மன்னன் மீறிவிடலாம். ஆனால் இயற்கைச் சட்டத்தை மீறக்கூடாது, என்றும் அவர் கூறினார்.

சட்டங்களைப் பிரயோகிக்கும் ஒவ்வொரு சுதந்தர சமுதாயத்திலும் முடிவான அதிகாரம் ஓரிடத்தில் இருக்கவேண்டும். அது ஒருவர் கையிலோ அல்லது பலர் கையிலோ இருக்கலாம். அந்த இடத்திலிருந்துதான் சட்டங்கள் பிறக்க வேண்டும். சட்டத்துக்கே பிறப்பிடமாயிருக்கும் இந்த அதிகாரம் சட்டத்திற்கு மேற்பட்டதாயிருக்க வேண்டும். அதாவது இந்த அதிகாரமுடையவர், தன்னால் இயற்றப்பட்ட சட்டத்துக்குக் கட்டுப்பட்டவரல்ல; அந்தச் சட்டத்தை மாற்றவோ, மறுதலிக்கவோ அவருக்கு உரிமையுண்டு.

ஆனால், இயற்கைச் சட்டம், கடவுளால் ஏற்படுத்தப்பட்ட நியதிகள்தான். அந்த அதிகாரத்தைப் பெறும்போது — அதாவது சிம்மாசனம் ஏறும்போதோ — கொடுத்திருக்கும் வாக்குறுதிகள், இவைகளுக்கு அவன் கட்டுப்பட்டவனே. இவைகளை மீறுகின்ற மன்னன் கொடுங்கோலனாவான்.

இவ்விதம், போடின் கூறியதனால் அரசனுக்கும் மக்களுக்கும் ஒரு ஒப்பந்தம் உண்டு. அந்த ஒப்பந்தத்தின்படி, தான் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளைக் காப்பாற்றவேண்டிய கடமை மன்னனுக்கு உண்டு என்று அவர் நம்பியிருக்கவேண்டும் என்று தெரிகிறது.

**பதினேழாவது நூற்றாண்டு**

போடினுக்குப் பின் வந்த ஹாலந்து நாட்டைச் சேர்ந்த **க்ரோஷியஸ்** என்பவர் இந்த ஒப்பந்தக் கொள்கையை மேலும் விவரித்துக் கூறினார். மனிதனுக்கு இயற்கையாகவே அரசியல் உணர்ச்சியும், சேர்ந்து வாழும் பண்பும் உண்டு என்று அரிஸ்டாட்டிலைப்போல அவரும் நம்பினார். அதனால்தான் மனிதன் சமுதாயத்தில் வாழ விரும்புகிறான். சமுதாயம் இயற்கையான அமைப்பாயிருந்தாலும் அரசு என்பது மக்களால், செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு; அது ஒப்பந்தத்தின் விளைவு. சுயநலத்தின் காரணமாக, சொந்த நலத்தைக் கருதி மக்கள் இந்த ஒப்பந்தத்தை செய்துகொள்ளுகிறார்கள். தங்களுக்குள்ளே அமைதியை நிலைநாட்டி, சொத்து, சுதந்தரம், உயிர் இவைகளைக் காப்பாற்றவே ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அவனிடம் அதிகாரத்தையும் பொறுப்பையும் ஒப்படைக்கிறார்கள். அதனால், சமுதாயத்தில் அரசும், அதை நடத்த மன்னனும், அரசாங்கமும் ஏற்படுத்தப்படுவது மக்களுடைய விருப்பத்தால், அவர்களுடைய ஒப்பந்தச் செய்கையால்தானே தவிர, தெய்வீக ஏற்பாடல்ல என்று எடுத்துக் காண்பித்தார்.

தெய்வீக உரிமைக் கொள்கையைக் கண்டித்தபோதிலும், மன்னனுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதோ, திருப்பிப் பிடுங்கிக் கொள்ளுவதோ கூடாது என்று வாதாடினார். மக்கள், மன்னனிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது தங்கள் முடிவான அதிகாரத்தை அவனிடம் நிரந்தரமாக ஒப்படைத்துவிடுகின்றனர். அவர்கள் தாங்களாகவே மனமொப்பி அதைச் செய்தபிறகு, எக்காரணத்தை முன்னிட்டும் அந்த அதிகாரத்தைத் திருப்பிக் கேட்க அவர்களுக்கு உரிமையில்லை என்றார். அதனால் மன்னனை எதிர்ப்பதும், அவனை மாற்றுவதற்கு முயற்சிப்பதும் தவ

## பீகாரில்

**அஷுடோஷ் பட்டாச்சாரியா என்னும் நிபுணர், பீகாரில் வாழும் பிர்ஜியாஸ் என்னும் ஆதிவாசிகளின் நிலைபற்றிய விவரங்களைத் தந்தார். இந்தக் காட்டு மனிதர்கள் அங்கே வாழ்வதை இதுவரை யாரும் அறிந்துகொள்ளவே இல்லையாம். சோடா நாகபுரி பகுதியில் உள்ள அடர்ந்த காடுகளில் அவர்கள் வாழ்கிறார்களாம். அவர்கள், சொந்தமான தனிமொழி ஒன்றைப் பேசுகிறார்கள் என்றும், அந்த மொழியின் அமைப்பு திராவிட மொழிகளின் அமைப்பைப்போன்று இருக்கிறது என்றும் பட்டாச்சாரியா தெரிவித்தார். அவர்கள் மொத்தம் 3000 பேர் இருக்கிறார்களாம்.**

ருனது. அவன் மக்களைக் கொடுமைப்படுத்தினாலும், அவர்களுடைய உரிமையைப் பறிக்க எத்தனித்தாலுங்கூட மன்னனை எதிர்த்தல் கூடாது. ஆனால், மன்னனுடைய ஆணைகள் இயற்கைச் சட்டத்துக்கும் தெய்வீக நியதிக்கும் முரணாக இருந்தால், அதற்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டு அப்படிக் கீழ்ப்படியாமைக்குத் தண்டனை தரப்பட்டால், அதை அப்படியே ஏற்றுக்கொண்டு அனுபவித்துத் தான் தீரவேண்டும். அப்பொழுதுங்கூட மன்னனை எதிர்ப்பது கூடாது என்கிறார், க்ரோஷியஸ்.

ஒரு அரசு அல்லது ராஜ்யத்தில் சர்வ அதிகாரமும் தன்னிடம் கொண்ட அதிபதி—தன் ராஜ்யத்துக்குள் எவருக்கும் அடங்கினவனல்ல. அதுபோல அவன் பிற நாட்டு அதிபதி எவருக்கும்—போப் போன்ற மதத்தலைவரானாலும் புனித ரோம சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகயிருந்தாலும் — பணியவேண்டியதில்லை. ஒவ்வொரு நாடும் தனியே பிற நாட்டினரின் தலையீடின்றி வாழ உரிமையுடையது. இதுதான் சர்வதேச அரசியல் பற்றிக் ரோஷியஸ்ன் கருத்துக்கள்.

(தொடரும்)

# அந்த மனோபாவம்!

“சார்! நீங்க சொல்றதெல்லாம் சரிதான் ஆனால், துவேஷம் உண்டாக்கிறவகையிலே பேசறதையும் எழுதறதையும் மட்டும் நிறுத்திட்டீங்கன்னா, எவ்வளவு பலம் சேரும் தெரியுமா, உங்கக் கட்சிக்கு?”

“எங்களுக்குமட்டும என்ன சார்! ஜாதி ஒழியனும், பேதமெல்லாம் இல்லாம ஒற்றுமையா இருக்கனும் கிற எண்ணம் கிடையாதோ? கால வேகத்தை அறியாதவங்கன்னு, எங்களைப்பற்றி எண்ணுறீங்க.”

“எங்களிலேகூட ரொம்பப் பேருக்கு, நீங்க சொல்ற கொள்கை, சீர்திருத்தம், தனியா பிரிந்து வாழனும்கிற திட்டம் எல்லாம் பிடிக்குது. ஆனா, இப்படி, பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்று பிரித்துப் பிரித்து பேசுறீங்க, பாருங்க! அதுதான், கொஞ்சங்கூடப் பிடிக்கல்லே”

*

இப்படி குறைபட்டுக் கொள்வோர், அநேகம்! அதுவும், திராவிடரியகத்தின் பவனி, நாட்டின் சந்து பொந்துகளில்லாம் அதிகரிக்க அதிகரிக்க, இவ்வண்ணம் பெருமூச்சோடும், ஆவலோடும், நமது தோழர்களிடம கூறுவோரின் பட்டியல், அதிகமாகியே வருகிறது. ரயில் பிரயாணத்தின் போதும், நாலுபேர் சந்திக்கிற இடத்திலும், நந்தவனப்பேச்சிலும், வகுப்பறையிலும், இப்படிப்பட்ட வாதப் பிரதிவாதங்கள், நாள்தோறும் நடைபெறுவதை அறியாமலில்லை, நாம். உண்மையுங்கூடத் தான்! இந்த விஷயத்தை ஒதுக்கிவிட்டு, எல்லோரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு புதுக்கட்சி ஆரம்பியுங்கள், புதுமைகளைச் செய்யலாம்நாட்டில்”-என்று, நாம்கலங்கி கண்ணீர் சிந்திக்கிடந்த சமயத்தில், மறையவர் குலத்துதித்த ‘கல்கி’ அவர்கள்கூட, திட்டினார், தன்னுடைய ஏட்டில். ஏனையோரைவிட, இந்நாட்டில் படித்துப் பட்டம் பெற்றதோடில்லாது கால ஓட்டத்தையும் கருத்து வளர்ச்சியையும், பகுத்துணரும், சக்தி பெற்ற பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் இப்படியொரு இடம் இல்லையே! என்று ஏங்கியபடி பார்ப்பன வகுப்பிலே இருக்கிறார்கள். கரையும் காங்கிரஸ்! உருவில்லா பிரஜா சோஷியலிஸ்டு! நிறமாறும் கம்யூனிசம்! வெறிகொண்ட இந்துமகா சபை!—இவைகளைக் கண்டு, அவைகளிலேயிருக்கும் நியாய நேர்மைகளைவிட அதிகமான வலிவையும் பொலிவையும் பெற்றிருக்கும் நமது இயக்கத்தைப் பார்த்து, ‘இந்தத் துவேஷமட்டும் இல்லாமலிருந்தால்...!’— என்று, பெருமூச்சுவிடும், நண்பர்கள் கூட்டம் மிகப் பெரிது. அவர்களிலும், உள்ள உறுதியும், அதைவிட நெருங்கிவந்து நிலைமையை உணரும் பக்குவமும் கொண்ட, பல பார்ப்பனத் தோழர்கள் இயக்கத்தின் நிழலிலே, இடந்தேடத் தவறவில்லை! எனினும், அவர்கள், மிகச் சிலர். மிகப் பலரோ, தலைப்பில் நாம் தந்ததுபோல, பெருமூச்சுக்களை விட்டவண்ணம், கிடக்கிறார்கள். அவர்களது ஐயம், இன்னும் தீர்ந்தபாடில்லை! கழகத்தின் கொள்கை என்னவென்பதை, நாடு முழுமையும் எடுத்துச் சொல்லியும்கூட, துவேஷம் எனும் நஞ்சு, நமது போர்வைக்குள்ளியிருப்பதாக அஞ்சிய வண்ணமே இருக்கின்றனர். திராவிடரியக்கம், ‘துவேஷம்’ என்கிற ஒரே கொள்கையைப் பிடித்துக்கொண்டு ஊசலாட வேண்டிய இயக்கமல்ல! இந்த நாட்டுப் பார்ப்பனர்களைமட்டும் பிரச்னையாக வைத்து, ‘பார்! பார்!’ என்று மக்களுக்குக் காட்டி, வளர்ச்சியைத் தேடிக்கொள்ளவேண்டிய நெருக்கடியிலே இருப்பதுவுமல்ல!! வெள்ளையனைப்பார்— இந்த முழக்கம் காங்கிரசுக்குத் தேவையாயிருந்தது; முதலாளிகளைப்பார்—இது, பொதுவுடைமைவாதிகளுக்குத் தேவைப்படுகிறது—இதேபோல், திராவிடரியக்கத்துக்கு அவசியமான மூலமுழக்கம், பார்ப்பனர்களைப்பார், என்பது அல்ல. அது, ஒரு சமயத்திலே. தேவையாயிருந்தது! அதனால், இப்போது அறவே, அவசியமில்லை என்றும் பொருளல்ல; ஒரு காலத்தில், அந்த முழக்கம், ஒன்று மட்டுமே தேவையாயிருந்தது — இழிவு நிலைக்கு விரைந்து கொண்டிருந்த இந்த சமுதாயத்தை வாழ்விக்க. அந்த ‘ஜஸ்டிஸ்’ கட்சியின் காலமல்ல, இது! அப்போதிருந்த நிலையுமல்ல, இப்போது இருப்பது!! முப்பது ஆண்டுகள், தென்னகத்தின் சமூக வாழ்விலே, பெருமைப் படக்கூடிய ஒரு அரிய சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது, அறிவு இயக்கம். ஆதலால், இன்று அறிவியக்கத்துக்கு பார்ப்பனர் மட்டும் அல்ல எதிரி! அவர்களைவிடப் பெரிய எதிரிகளை நோக்கி, அதன் படைகள் எக்காளமிடுகின்றன, இன்று!! இழந்த சில இடங்களை மட்டும் உயர் சாதியாரிடமிருந்து கைப்பற்றவேண்டும், அதுவே அரசியல் லட்சியம் என்றிருந்த நிலைமைமாறி—இழந்த நாட்டினையே, மீட்கவேண்டும் என்கிற அளவுக்கு பிரச்னை பெரிதாகியிருக்கிறது.

‘இழந்த நாட்டினை மீட்பதுமட்டுமின்றி, அப்படிப் பெறுகிற நாட்டை

எப்படி வளமுள்ளதாகச் செய்வது என்பதற்கான வகையில், பண்பு படுத்தும் பணியும், அறிவியக்கத்தின் தலையில் கிடந்து வருகிறது. நாட்டின் மூடநம்பிக்கைகள், மக்களை நலியச்செய்யும் ஜாதிபேதம், ஆண்டான் அடிமைப் பிளவுகள் இத்தனையையும் போக்கி, எதிர்காலத்தில் விடுதலை பெறப்போகும் பூமி எப்படியிருக்கவேண்டும் என்று, திட்டமிட்டு வேலைசெய்யவேண்டிய பணியும் ஏராளமாகயிருக்கிறது.

இப்படிப்பட்ட நேரத்தில், எப்போது பார்த்தாலும், 'பார்! பார்! பார்ப்பனனைப் பார்,' என்று சொல்லிக்கொண்டேயிருப்பது, வளர்ந்து கொண்டிருக்கும் உலகில், உரிமை முரசங்கள் ஒலித்துக்கொண்டிருக்கும் இந்த யுகத்தில், பிற்போக்கானது என்பதை, புரிந்துகொள்ளாமலில்லை, அறிவியக்கம்.

இந்த உண்மையை, ஐயம் கொள்வோர், அவசியம் உணரவேண்டும்.

*

ஆனால், வேலைகள் வளர்கின்றன என்பதற்காக, நாட்டின் வேரில் படிந்திருக்கும் பூச்சிகளைப்பற்றி மறந்துவிடுவதென்பதும், விவேகிகள் செயலல்ல! உச்சிக்குப்போய் விட்டோம் என்பதால், கனியைப் பறித்துச் சுவைத்துவிட்டால் போதும் என்கிற அவசர ஆசைக்கு ஆளாகி, கனிதரும் மரத்தவேரைக் கெடுக்கும் பூச்சிகளைப்பற்றி மறந்துவிடுவது-விபத்து! விபத்து! மாபெரும் விபத்து! அதனால்தான், நாட்டு விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலையென்கிற இத்தனை லட்சியங்களைச் சுமந்து கொண்டிருக்கும் நாம், நமது கால்களை அடிக்கடி சுற்றிக்கொள்ளப் பாய்ந்துவரும் பாம்புகளைப் பற்றியும் எச்சரிக்கையாயிருக்கவேண்டியிருக்கிறது. அப்படி எச்சரிக்கைக் கொள்வது, போர்க்களத்தில் வீரர்களுக்கும், அரசியல் உலகில் அறிவாளிகளுக்கும் மிகமிகத் தேவை! இல்லையென்றால்,முன்னேறும் வீரர்கள் முறியடிக்கப்படுவார்கள்; வெற்றிபெற்ற அரசியல் இயக்கங்கள் வீழ்ந்துபட்டு அழியும். எனவேதான், இத்தகைய பாம்புகளைப் பற்றி, அடிக்கடி நாமும், நமது கழகத் தோழர்களும் கவனப்படுத்திக்கொள்ள நேருகிறது! அந்த நச்சரவங்களைப்பற்றி நாம் கவனப்படுத்தும்போது, நாட்டிலுள்ள 'பெருமூச்சு விடுவோர்'களுக்கும், நாடி துடிக்கிறது. ஐயோ, இதை மட்டும் இவர்கள் பேசாதிருந்தால்.. ......!—என்று எண்ணுகின்றனர். அவர்களுக்கு ஒரு உண்மையைத் தெளிவாக்க விரும்புகிறோம்.

தோழர் லோகியா-சராசரி சோஷியலிஸ்டுகளைவிட, தக்கதொரு நிலை பெற்றவர். உலக அனுபவமும், தியாக மனவளமும், பெற்றவர். அவர், இந்தவாரம், சென்னைக்கு வந்திருந்தபொழுது, இதே பிரச்னையைப்பற்றி கடிதம் ஒன்று எழுதித் தந்துவிட்டுப் போயிருக்கிறார். கடிதம், நமக்கல்ல; 'சோஷியலிஸ்டு' கட்சி ஏட்டுக்கு.

"சுதந்திரமாகவும், பரிபூர்ணமாகவும் செயலில் ஈடுபடாமல் இருப்பதற்கு நமது தேசத்தில் குறிப்பாக தென்னிந்தியாவில் ஜாதிமுறைகள் தடைகளாக இருக்கின்றன." "உயர்ந்த ஜாதி"யும்,"தாழ்ந்த ஜாதியும்" ஒருவரையொருவர் இழுத்துக்கொண்டு செயலற்ற தன்மையில் ஆழ்ந்துவிடுகின்றன. இத்தேசத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளிலும் "உயர்ந்த ஜாதிக்காரர்கள்" தான் தலைமை வகிக்கின்றனர். தாழ்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள்—பல நூற்றாண்டுகளாக நசுக்கப்பட்ட இவர்கள்—"வியாதியினால்," பீடிக்கப்பட்டுள்ளனர். எதிராளியை பயமுறுத்தத்தெரியும். அல்லது துதிபாடி பாராட்டத்தெரியும். இரண்டையும் தவிர்த்து ஆண்மையோடு நடந்து கொள்ள அவர்களுக்குத் தெரியவில்லை. உயர்ந்த ஜாதிக்காரன் என்று மமதைகொண்டுள்ளவர்களின் மனப்பான்மையும், பயமுறுத்தலும் அல்லது துதிபாடிபாராட்டும் தாழ்ந்த வகுப்பாளரின் மனப்பான்மையும் அடியோடு மாறவேண்டும். பிராமணீயம், போகவேண்டும்; பிராமணரல்லாதாரீயமும் போகவேண்டும்.

உடனடியாக விளைவுகளைக்கண்டு அச்சமுறாமல், தைரியமான முறையில் இந்த நல்ல நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான செயலில் ஈடுபடவேண்டுமென்று பிராமணர், பிராமணரல்லாதார் இரண்டிலுமுள்ள இளைஞர்களை நான் வேண்டிக்கொள்கிறேன்."

சோஷியலிஸ்டு லோகியாவின் கடிதம், இது! அவர், தெளிவாகத் தீட்டுகிறார்!!

**உயர்ந்த ஜாதியினரே, அரசியல் கொட்டம் அடிக்கின்றனர்.**

**தென்னிந்திய அரசியலில் ஜாதிப் பிரிவுகளே, பெரிய முட்டுக்கட்டை.**

**உயர்ந்த ஜாதியும், தாழ்ந்த ஜாதியும் ஒருவரையொருவர் இழுத்துக்கொண்டிருக்கின்றன.**

**தாழ்ந்த ஜாதியினர், நீண்டகாலமாக 'வியாதியால்' பீடிக்கப்பட்டவர்கள்.**

இவ்வண்ணம் குறிப்பிட்டுவிட்டு' கடைசியில், "பிராமணீயமும்," அதேபோல் "பிராம்மணரல்லாதாரீயமும்," போகவேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு சமதர்மவாதியின் நினைவு, அப்படித்தானிருக்க முடியும்! அதே சமதர்மவாதிகள் தான், நாமும். அவர் குறிப்பிடுவது போல, நாட்டில், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கிற பேதங்கள் ஒழிக்கப்பட்டு "எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் மனித குலம்," என்கிற பொதுநெறியுடன் வாழவேண்டும் என்பதே, திராவிட முன்னேற்றக் கழகத்தின், குறிக்கோளாகும்.

இதனை நாம் எடுத்துரைக்காத இடமில்லை; எழுதாத, நாளில்லை.

எனினும் ஒரு சந்தேகம், அவர்களுக்கு — "அதனால்தான், சார்! நீங்கமட்டும் இப்படி, பேதப்படுத்துறதுபோல, பேசாமெ, எழுதாமெ, இருந்தா.........!," என்று இழுக்கின்றனர்.

*

உண்மைதான்! அப்படி எழுத வேண்டிய அவசியமும், பேசவேண்டிய நெருக்கடியும் கிடையாது நமக்கு. அதைவிடப் பலவேலைகள் இருக்கின்றன! வளரும் வடக்கு—மிரட்டும் ஆலையரசன் — வாட்டும், ஏழை பணக்காரன் பேதம்—காயும் கழனிகள்—மேயும் மிராசுகள், இவைகளைப் பற்றிக் கவனித்துவிட்டுப் போகலாம். ஆனால், எதிர்கால இன்பத் திருவிடத்தைப் பண்படுத்தும் வேலைகள் இவை! இழந்த நாட்டைப் பெறும் முயற்சிகள் இவை!!—இந்த முயற்சிகளிலே ஈடுபடும்போது, நமது காலைக்கடிக்கும் பாம்புகளும் படம் எடுத்துக்

(10-பக்கம் பார்க்க)

## திருமணம்

**தவுலத்தபாத் திராவிடநாடு ஏஜண்டுத்தோழர் வெங்கட்டராசுலுவின் தங்கை சரோஜா—முனிராசு வாழ்க்கை ஒப்பந்தம் 11—2—55 ல், நடைபெற்றது.**

திராவிடநாடு

காஞ்சி] 20—2—55 [ஞாயிறு

# சித்திரம், செப்புவது

★

கூடனும் துணியான் அந்தக் காரியம் செய்ய! ஆனால், நேரு பண்டிதர் செய்கிறார்—நீண்டதோர் மரம் ஒன்றின்மீது அமர்ந்துகொண்டு!

தாமரை பூத்த தடாகம்—அங்கே, தையலார் சிலர், தளிர்மேனி தெரிய குளித்தவண்ணம் இருக்கின்றனர். குறும்பன்கூட கொஞ்சம் நாணுவான், நேரில் செல்ல — காமுகன் கூட, செடிமறைவையும், தேடினால் தென்படமுடியாத இடத்தையும் தேடுவான், அந்தக் காட்சியைக் கண்டு ரசிக்க!

ஆனால், அன்பர் நேரு, மரம் ஒன்றின் கிளையிலே அமர்ந்துகொண்டு ரசிக்கிறார், அந்தக் காட்சியை! அப்படி இப்படித் திருப்பவில்லை, முகத்தை — 'காட்சி'யின் பக்கமே, கவனம், கருத்து எல்லாம்!

சகல கலா வல்லவராயிற்றே—இந்த அளவோடு நின்றால், சிறக்குமா, சம்பவம்? எனவே, கைகளிலே, சேலைகளையும் வைத்துக்கொண்டிருக்கிறார்! எதற்கு? ஏழை போலும் அந்த ஏந்திழைகள்—அவர்களுக்குத் தானமளிக்கவே, தயாபரர் அங்கு தங்கியிருக்கிறார் போலும் — என்றெண்ணுவீர்கள். அல்ல, அல்ல! நேரு பண்டிதர், தேடியெடுத்தவைகள், அல்ல, அந்தச் சேலைகள். குளத்திலே குளிக்கின்றனரே, அந்தக் கோமள வல்லிகளுக்குச் சொந்தமானவை! அவைகளைத்தான், எடுத்துவைத்துக்கொண்டு, "சேலையில்லாத பெண்களே! என்ன செய்யப் போகிறீர்கள் நீங்களே!" என்று சிந்துபாடுவதுபோலச் சிங்காரமாகப் பார்க்கிறார், அவர்களை! விழிக்க விழிக்கப் பார்க்கிறார்!!

உண்மைபாகவா?—என்று கேட்பீர்கள். அந்த நிலையில் அவரைக் காணவேண்டுமென்று நமது 'மித்திரன்'ருக்கு ஒரு ஆசை! எத்தனையெத்தனைப் படங்களைப் போட்டுக் காட்டியாயிற்று — இப்படியொரு படத்தைத்தானா, மக்கள், 'ஜீர்ணம்' செய்துகொள்ள மாட்டார்கள்? அந்தத் துணிச்சல். அதனால், நினைவூட்டுகிறார், கோபியரின் சேலைகளைத் திருடிய குழலூதியின் சிங்காரலீலையை! குழலூதியின் இடத்தில், மோதிலாலின் புதல்வர்—கோபியரின் நிலையில் ஆச்சாரிய கிருபளானியும், அவர்தம் கட்சியினரும். சேலையின் பெயர் சோஷியலிசம்! சிறு குறிப்பொன்று, "சோஷியலிஸ்டு இலட்சியத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது சோஷியலிஸ்டு கட்சிக்கு ஒரு அறைகூவல் என்று லோகியா சொன்னார்."

இப்படியொரு சித்திரம் 17ந் தேதிய இதழில் வெளிவந்திருக்கிறது! ஏட்டார் செப்பவிரும்புவது, பண்டிதரின் ஆவடித் தீர்மானத்தால் பிரஜா சோஷியலிஸ்டுகள், தமது சோஷியலிஸ்டுக் கொள்கையை இழந்துவிட்டு இக்கட்டான நிலையில் அவதிப்படுகிறார்கள் என்பதாகும். அதற்குத்தான் இப்படிச் சித்திரம்!

சொந்த மனைவியானாலும் அவளது சேலையை யுரிந்து நாலுபேர் நடக்கிற இடத்தில் 'ரசாபாசம்' செய்தால், அத்தகையவனைக் கண்டிக்கத்தவறார் மக்கள். ஆனால், நேரு, பிற பெண்களின் சேலையைக் களவாடிக் கண்ணனாகிறார்! பிரஜா சோஷியலிஸ்டுகளின் கொள்கையைக் களவாடுகிறார்!! எதற்கு? கிருஷ்ணன், ஏன் கோபிகைகளை அக்கொடுமைக்கு ஆளாக்கினான் என்று கேட்டால், அது அவனது லீலைகளில் ஒன்று பக்தர்கள் சொல்லிவிடுவர். நேருவின் செய்கையையும் 'லீலை' யென்று கருதச் சொல்கிறதுபோலும், மித்திரன்! நிச்சயம், எண்ணார், நேர்மையாளர்கள். அறுபதாண்டு கட்சி—அகிலம் சிறக்கச் செய்யும் கட்சி—அது, திருடுகிறது, சேலையை, சோஷியலிஸ்டுகளிடமிருந்து! ஏன்? அந்தக் கொள்கையை எடுத்து, அதற்குத் தக்கபடி ஆவனசெய்யவா! கோகுலபாலன், சேலையைத் திருடியது, சேல்விழிமாதரைத் திண்டாடச் செய்யவே தவிர, உருவான குறிக்கோளுடனே அல்ல. மித்திரனின் சித்திரப்படி, காங்கிரசின் சோஷியலிசத் தீர்மானமும் அதற்காகத்தான், என்று தெரிகிறது!

ஆச்சாரியா கிருபளானியும் அவர்தம் சோஷியலிஸ்டுத் தோழர்களும் காங்கிரசிலே இருந்தவர்கள். அங்கிருந்த ஊழல்கள் பிடிக்காத காரணத்தால், புதிய கட்சி அமைத்து அதன் கொள்கைகள் இன்னதென்று கூறி புதிய முகாம் அமைத்தார்கள். அந்த முகாமை அலங்கோலமாக்கியதில், ஆனந்தம் காண்கிறாராம், நேரு. அதைத்தான், சித்திரம் மூலம், செப்புகிறது மித்திரன்! மாற்றுக் கட்சிகள் சொல்லுவதை மனதிலேந்தி, காரியம் செய்வது, கஷ்டமல்ல நேருவுக்கு. அப்படிக் காரியங்கள் செய்வதைவிட, அந்தக் கட்சிகளைக் குலைப்பதில்தான் கவனம் சென்றுள்ளது, அதிகமாக! இந்த விளக்கத்தைத்தான், "சோஷியலிசம் 'மாதிரி' ஒரு சமுதாயத்தை நிறுவுவதுதான் காங்கிரசின் லட்சியம் என அண்மையில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது, தொழிலாளர்—நடுத்தர மக்களிடையே உருவாகி வரும் முற்போக்கு சக்தியினைச் சிதைவுறச்செய்ய வடநாட்டு ஏகாதிபத்தியம் செய்யும் கண் துடைப்புக் காரியம் என இம்மாநாடு பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது,"

என்று தெளிவாக விளக்கியிருக்கின்றனர்: ஒரு தீர்மான மூலம், பெங்களூரில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டில் சிந்தைகளிக்கும் வகையில், அங்கு நடைபெற்ற மாநாடு, அரியதோர் காட்சியாகயிருந்திருக்கிறது! அவ்வளவு சிறப்பாக நடைபெற்ற மாநாட்டில், காங்கிரசின் 'மாதிரிக்கூத்து' பற்றி, தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதே கருத்தைத்தான், மித்திரனும் தெரிவிக்கிறார்—சேலையைத் திருடுகிறாராம், பண்டிதர்! இந்தத் திருட்டுப் புத்தியா, வரவேண்டும் திசையெல்லாம் புகழும் ஒரு கட்சிக்கு? அதுவும், மற்றவர்களை மானப்பங்கப்படுத்தும் வகையில்! மித்திரன், லோகியா சொன்னதை வைத்து, பிரஜா சோஷியலிஸ்டுகளை மட்டும் தீட்டிவிட்டது சித்திரத்தில், ஒருவகையில், அவர்களும் அந்தக்காலக் கோபியர்களைப் போலத்தான் நடந்துவருகின்றனர், காங்கிரஸ் விஷயத்தில். ஆனால், கிருஷ்ணனின் கேடுகளைக் கண்டிக்கும் பிறகட்சிகள் இல்லாமலில்லை

நாட்டில்! அவைகளின் அருகில் நெருங்கவும், முடியாது, பண்டிதர் குழாத்தால். ஆயினும், அவர்கள் கூறும் கொள்கைகள் தம்மிடமும் உண்டு, என்று மக்களுக்குக் காட்டும் வகையில் 'ஆவடி' செய்யப்பட்டிருக்கிறது.

வயதாகிப்போன நாட்டு வைத்தியர்கள், தாங்களும் பிரபல டாக்டர்களைப்போல 'சிகிச்சை' செய்யமுடியும் என்று கூறிக்கொள்வதற்காக, நாகரீகக் கருவிகள் சிலவற்றை வாங்கிக்கொண்டுவந்து வைத்திருப்பதுண்டு நாட்டுப்புறங்களில்! சமயா சந்தர்ப்பங்களில், அவைகளை, எடுத்துக்காட்டி — "அவர்களிடம் என்ன! என்னிடமும் இல்லையோ!," என்று சொல்லிக்கொள்வதுண்டு. அதுபோலத்தான், 'ஆவடி' கண்டோரின் நிலையும்! நாட்டு வைத்தியரின் திருட்டுத்தனம் அறியா, மந்தைகள் அல்ல, இந்தக் காலத்து மக்கள். கோழி எது, குயில் எது என்று அறிய முடியாதவர்களுமல்ல! ஆயினும், அப்படியொரு தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டு, உயிர்வாழ நினைக்கிறது காங்கிரஸ். அந்த உண்மையைத்தான், தெரிந்தோ தெரியாமலோ, செப்புகிறார் மித்திரனார்! — பண்டிதரை, சேலை திருடிய கண்ணனாகச் சித்தரித்து!! ★

---

# ★ விஞ்ஞானக்கண்! ★

ஜடாமுடிதாரியான அவர், தணலுக்கு நடுவே வீற்றிருக்கிறார்.

எப்படி ?

மக்கள் செப்புகின்றனர், மகேசனின் பிம்பமய்யா அவர்! எங்கள் குலக்குரு! தீயும் தீண்டாது! நீரும் கரைக்காது! அவரை!—என்பதாக.

பூஜிக்கின்றனர்! போற்றுகின்றனர்! அருள்பாலிக்கவந்த அண்ணலே, என்று அடிபணிகின்றனர்!!

ஆனால், அவராலோ, இதை நம்பமுடியவில்லை.

காட்சியோ, கண்முன்! தீயின் நாக்குகள் சுழன்று சுழன்று வீசுவதோ, தெரிகிறது! சுடவும், செய்கிறது, நெருங்கினால். கனவல்ல; உண்மை, காண்பவரோ, கடவுளின் செயல், என்று கூறி கன்னத்திலடித்துக் கொள்ளுகின்றனர்!

எப்படி?–திகைக்கிறார், அவர்; மக்கள் சொல்லுவதுபோல, மகேசனின் தொடர்புகொண்ட விஷயம் என்பதை மட்டும், அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இடமோ, இமயமலைச்சாரல்—திபேத்! ஜடாமுடியோ, திபேத் மக்களின் குலக்குரு, லாமா! நம்பமுடியாத நிலையில், யோசித்த வண்ணம் நிற்கும், இவரோ—சென்னைவாசி.

சீர்திருத்த செம்மலோ என்று எண்ணுவீர்கள்—கடவுளைக் காயும் கசடர் கூட்டத்தாருள் ஒருவரோ, என்றும் சந்தேகம், எழும்பும். அல்ல, அல்ல! அவரும், ஒரு சன்யாசிதான்! இகலோக இச்சைகளை வெறுத்து, எம்மான் திருவடியை எப்படிச் சேருவது, எனும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு கயை, காசி, கங்கை, யமுனை என்று திரிந்துகொண்டிருப்பவர்,

என்றாலும், எப்படி என்று சந்தேகப்பட்டார்! ஈசன் செயல், என்று மக்கள் நம்புவதை ஏற்கமுடியவில்லை, இவரால்!!—அதனால், ஆண்டவன்மீது பக்தியில்லாத பதர் என்றும் கருத முடியாது. ஆண்டவனை, நம்புகிறவர்! ஆனால், அவருடைய பெருமையை, இதுபோன்ற சித்துக்களால் நிலைநாட்ட நினைப்பதை வெறுப்பவர். அன்பு, சத்யம், கருணை—இவைகளே, ஈசன்! அவனது மக்களிடம், இந்தக் கருத்துக்களைப் பரப்புவதே, அவனது அடியார்களின், கடமை — என்று, கருதுகிறவர். வேதங்களைப் புரட்டி, அதன் வினோதங்கள் எங்கே உண்டு, எல்லாம் இருக்கிறது அவைகளில், என்று பீத்தித்திரியும் கூட்டத்தின், துளி அல்ல! விஞ்ஞானம், கற்றவர்!!

காவியுடுக்கு முன், சென்னையிலே பிரபல டாக்டராயிருந்தவர். பூர்வாசிரமப் பெயர், டாக்டர் நாராயணன்! இப்போதோ, அவரைப் போற்றுகிறவர்கள், சுவாமி நாராயணானந்த் சரஸ்வதி என்கிறார்கள்,

அவர்தான், அந்த அதிசயத்தை நம்பவில்லை!

இப்படியொரு சித்து, இங்கே நடைபெற்றிருந்தால், குன்றக்குடியும் கிருபானந்தமும், குரலெடுத்துக் கூவும். தினமணியும் மித்திரனும், தினசரி படம் எடுத்துப் பக்கம் பக்கமாகப் போடும். பாமரர் முதல் 'பாரதரத்னங்கள்வரை, குருநாதருக்கு, பாதபூஜை செய்யத் தவறமாட்டார்கள். பக்தர்களுக்குப் பரமனின் சக்தியை விளக்கிடும் விந்தைச் செயல் என்பதைவிட, நாஸ்தீகப் பதர்களாகிய நம்முடைய 'கர்வத்தை அடக்கிடும் நற்சான்றெண்ணி, நாள்தோறும் நாவாலும் பேனாவாலும், தீட்டியெறிவர், தீப்பொறிகளை.

நல்லவேளை! நடைபெற்ற இந்த அதிசயம், இமயமலைச்சாரலில். கண்டவரும், விஞ்ஞானமுணர்ந்த ஒரு சன்யாசி.

அவரால், அதனை ஆண்டவன் மகத்துவம் என்று நம்பமுடியவில்லை.

ஞானக்கண் போதாதென்று விஞ்ஞானக் கண்ணைப் பெற்றார். ஆராயலானார். விளைவாகக் கண்டாராம், அந்த அற்புதத்துக்குக் காரணம் ஆண்டவன் அருளல்ல — ஒரு மூலிகை என்று. லாமாவைக் கேட்டதற்கு, அவர் சொல்லவில்லையாம் — ஆண்டவனின் அருளால்தான், நான் தீக்குண்டத்தில் நிற்கிறேன்–என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டாராம். நம்பிக்கையிலாத நாராயணானந்த், ஒளிந்திருந்தோ, மறைந்திருந்தோ, லாமாவின் உடலில் பூசப்பட்டிருக்கும் திரவத்தையும், அது தயாரிக்கப்படும் நாலுவகை மூலிகைகளையும் கண்டறிந்திருக்கிறார். அந்த மூலிகைகளின் புதிர், விளங்காத விஞ்ஞான இரகசியமாயிருக்கிறது என்கிறார். அதனைப் பூசிக்கொண்டால், அணுகுண்டுவீச்சுகூட ஒன்றும் செய்யாது என்பது அவருடைய நம்பிக்கை.

அது எப்படியோ, போகட்டும்—ஈசனின் சித்துக்கள் என்கிற பெயரால் எதெதையோ நம்பச் சொல்லும் நம்மவர்களுக்கு இந்தச் சம்பவத்தைச் சுட்டிக் காட்டுகிறோம். புரியாத செயல் ஒன்று நிகழ்ந்தால், உடனே அது, ஆண்டவனின் அற்புதம் என்று கூறிவிடுகிறார்களே, நாராயணானந்த் யார்? அவரும், ஒரு சன்யாசிதான்! எனினும் 'பூர்வாசிரமதோஷத்தால்'' விஞ்ஞானம் படித்ததன் காரணத்தால், லாமாவின் அற்புதத்தை நம்பவில்லை! விளைவாக, அந்த அதியற்புத மூலிகையைத் தெரிந்துகொண்டார்!–இந்தப் பண்பு, எல்லோருக்கும், ஏற்பட்டால் என்ன? சொன்னால் எங்கே கேட்கிறார்கள் — தொடைதட்டிக்கொண்டன்றோ பாய்கிறார்கள்! ★

---

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு திரிவதை, எப்படி மறந்து விடமுடியும்? 'எல்லோரும் ஒன்று,' என்கிற எந்த மனித சமுதாயத்தை நிறுவப்பாடுபடுகிறோமோ நாம், அந்தக் குறிக்கோளை அழித் தொழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் அவைகளை மறந்தால், விளைவு விபரீதமாகத்தானே நேரும்.

அதனால்தான், அடிக்கடி, உறுத்துகின்றதென உரைக்கின்றனரே நண்பர்கள், "அதனை" எடுத்துரைக்க வேண்டிய அவசியம் நேருகிறது.

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை மறுத்து அதனால் நாட்டுக்கு நன்மைகிடையாது என்பதை வெளிப்படையாக விவரிக்க முடியும் — பிரஜா சோஷியலிஸ்ட்டுகளின் பூமிதானப் பெருமையால் ஏற்படும் பலாபலன்கள் என்னவென்பதை வெளிப்படையாக அலச முடியும்—கம்யூனிஸ்டுகளின் போக்கைக் காரணம் காட்டிக் கண்டிக்க இயலும்—ஆனால், இந்த அரவங்களின் செயலை, குறிப்பிட்டுக் கூறமுடியாது! இதுதான் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது!! அவ்வளவு, ஆபத்தானவை. வெண்ணெய் பூசப்பட்ட விஷக்கனி! மறைந்து தாக்கும் அம்பு! மனதால் கொல்லும் நச்சு!! அதனால்தான், அடிக்கடி, எச்சரிக்கை பெற வேண்டியவர்களாகயிருக்கிறோம்.

"எல்லோரும் ஓர் குலம்—அதுவே, மனித குலம்" என்கிற எண்ணத்துடன் நாம் பாடுபடினும், அவை மட்டும், அந்தக் குறிக்கோளை ஏற்றுக்கொள்ளா—அப்படியொரு எண்ணம் நம்மிடம் இருப்பதையே, அங்கிகரிக்கமாட்டா. அவைகள் எண்ணம், மனதுக்குள்ளேயே, மறைந்துகிடக்கும்! அது, வெளிப்படையாக புறப்படாது—எவரும், அதனை, இதுதான் என்று தெளிவாகக் கண்டுபிடித்தும் கூறிவிட முடியாது.

அன்பர் கிருஷ்ணமாச்சாரி, 'டில்லியிலிருந்து 'பைநாகப்பாய் சுருட்டிக்கொண்டு' வந்துவிட்டார். இவரைப்போல, இதற்கு முன்பும், பலர் வந்திருக்கிறார்கள் — மந்திரி பீடத்திலிருந்து இறங்கி! கிருஷ்ணமாச்சாரியை விட காங்கிரசில் ஒரு காலத்தில் பக்தி செலுத்தியவர் மறைந்த சர். ஆர். கே. சண்முகம் —பண்டிதமோதிலால்-நேருவிடமே பயிற்சி பெற்றவர் — உலகமே வியந்த அறிவியல் மேதை, அவர் வந்தார், டில்லியிலிருந்து — ஜான் மத்தாய், சிறந்த நிதி நிபுணர்; அவர், இறங்கிவந்தார் பீடத்திலிருந்து. அண்மையில், வி. வி. கிரி, தொழிலாளர் தம் தோழன் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இறங்கிவந்தார்— டில்லியிலிருந்து. இவர்கள் எவருடைய விலகலும், அவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படவில்லை; ஆனால், கிருஷ்ணமாச்சாரியார் விலகுவது மட்டும், பெரியதொரு விஷயமாக வர்ணிக்கப்படுகிறது, யாரால்? 'இந்து' வர்க்க ஏடுகளால்.! 'இந்து' தீட்டுகிறது, "உங்களுக்குக் கவனமூட்டுகிறோம். தென்னாட்டிலிருந்து, டில்லிக்கு மந்திரியாகப்போன ஒவ்வொருவரும்— ராசகோபாலாச்சாரியைத் தவிர—இப்படி விலகிவந்திருக்கிறார்களென்பதை உங்களுக்கு கவனமூட்டுகிறோம்" என்பதாக. இப்படி, நாம், 'கவனமூட்டிய' தடவைகள், பல உண்டு! அப்போதெல்லாம், அதற்கு இந்த உண்மை, தென்படவில்லை மனதில், ஆனால், கிருஷ்ணமாச்சாரியார் விலகிவருகிறார் என்றதும் 'தெற்கும் வடக்கும்' தெரிகிறது—கவனமூட்டுகிறது! கவனம்!

இதுமட்டுமல்ல, சில நாட்களாக டி. டி. கே. யைப்பற்றி 'இந்து'வில் வந்த செய்திகளைப் படித்தால் "அவைகளின் மனோபாவம்," விளங்கும்.

**அவர் விலகுவதைப்பற்றி, மந்திரிகள் மதிமயக்கமுற்றார்களாம்!**

**டில்லி முழுதுமே பேசுகிறதாம்.**

**உயர்தர அதிகாரிகள் ஒருவர் விடாமல், வந்து நயிலேற்றினராம். பாருங்கள், இவருடைய செல்வாக்கையென்று, செய்தியோடு ஒரு சிறு குறிப்பு!**

இவ்வளவு, விமர்சனங்கள்—'இந்து' நிருபர் முதல், ஆசிரியர் வரை, அவர் ஒருவர் விலகுவதைப் பற்றி ஆயாசப்படுகின்றனர்.

ஏன்?—'தங்களவர்,' எனும் ஒரு அலாதியான ஆசை!

'அந்த மனோபாவம்,' தான் அடிக்கடி, அவர்களைப்பற்றிய எச்சரிக்கையை உண்டாக்குகிறது, நமக்கு.

'இந்து' இன்னொரு குறிப்பும் தருகிறது—இவருக்குப்பின், கிருஷ்ணமேனன் வரலாம், மேத்தா வரலாம் என்றெல்லாம் கூறிவிட்டு, கடைசியில் "விந்தியப்பிரதேச கவர்னராயிருக்கிற கே. சந்தானம், மந்திரியாக வரலாம் என்கிற யூகமும் இருக்கிறது. விந்தியப் பிரதேசத்தில், அவர் காலத்தில் சாதிக்கப்பட்டிருக்கிற செயல்களை அறிந்தோருக்கு, மந்திரி சபைக்குள் அவர் இடம் பெறுவது எவ்வளவு நன்றாகயிருக்கும் என்பதை எண்ணாமலில்லை", என்றும் குறிப்பு, தீட்டுகிறது—அதன் மூலம், 'அவர் போய்விட்டால் இவரா'வது இடம்பெறக் கூடாதா? —என்று, ஏங்குகிறது.

'இந்து'வின் நிலை, இது! அதற்கு ஏற்படுகிறது, இப்படியொரு ஏக்க மனோபாவம்.

ஏனெனில், தம்மவர்க்கு ஏற்படும், ஏற்றமும் வீழ்ச்சியும், தங்களைப் பாதிப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

இப்படிப்பட்ட மனோபாவம், ஆச்சாரியார் முதல், "உயர்ந்த" இடத்திலிருக்கும் ஒவ்வொரு பார்ப்பனருக்கும், இருக்கிறது—இப்படிப் பட்டவர்களிருக்கும்போது, அவர்களுடைய மனோநிலையை, எடுத்துரைத்து எச்சரிக்கை பெறவேண்டியது, அவசியம் தானே?

அதனால்தான், இன்னும், 'அது, பற்றி பேசவேண்டியதாயிருக்கிறது—அறிவியக்கம்.

லோகியா கூறுவதுபோல, பிராமணீயம்—பிராம்மணல்லாதாரியம்என்கிற இரண்டும் ஒழியவேண்டும் என்பதில், எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல, நாம்.

இருபதாம் நூற்றாண்டிலா......! —என்று பெருமூச்சால் பேசுகின்றனரே, பார்ப்பனகுல முற்போக்குத் தோழர்கள், அவர்களைவிட இருபதாம் நூற்றாண்டின் சிறப்பையும், வளர்ச்சிகளையும் அறிவோம், நாம்.

எனினும், என்ன செய்வது!

இருக்கிறார்களே இவர்கள் — ஏமாந்தால், எத்தியெறிந்திட!! இவர்கள், மனோபாவம் மாறினால், நல்லது. நமக்குள்ள, 'ஒரு சுமை'யும் குறையும். ஏக்கத்துடன் பேசும், அந்த வட்டாரத்து இளைஞர்கள், அதற்கு முயற்சித்தால் — முகிழ்க்கும், புதுவாழ்வு! விரையும், தனியகம்!! அதற்கான அறிகுறியாவது, கிடைக்கிறதா, தெம்புகொள்ள.

குறைபடுவோர்தான் இருக்கிறார்கள்—வீதிக்கு, வீதி.

★

தொடர் சித்திரம்

# கடிகாரம்

13

அண்ணல்

கிழவர் கோலத்தில் அறைக்குள் வந்தாரே, அவர், அடியக்கமங்கலத்து ஆசாமியல்ல! சாமியாரிடம், தாசி, அந்த ஆசாமியிடம்போய் 'புதுச்சரக்கான' நான் வந்திருப்பது பற்றி சொல்லிவிட்டு வரச்சொன்னாளல்லவா? சாமியாரும் போயிருக்கிறார்! ஆனால், வழியிலேயே, அவருக்கு 'கிராக்கி' கிடைத்துவிட்டது. வாலிபக் கிழவர், இவரைச் சந்தித்து, இடம் விசாரித்திருக்கிறார். தேடிச் செல்வது வழியிலேயே கிடைத்தது என்கிற ஆனந்தத்தில், வந்துவிட்டார், சாமியார்! ஆனால், அவருக்கு எப்படித் தெரியும்—பின்னால், வரப்போகிற விபத்து! அவர்களைச் சந்தித்த போது, நான் மயங்கினேனல்லவா—யாரோ பெரிய மனுஷர்கள் நம்மைக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்று. பிறகுதானே தெரிந்தது, காமப் பித்தர்களின் விடுதி, என்பது! என்னைப்போலவே, அந்தச் சாமியாரும், ஏமாந்திருக்கிறார் — வாலிபக் கிழவரிடம். அதனால்தான் அழைத்துவந்துவிட்டார்! ஆனால், அறையைவிட்டு வெளியே வந்த போதுதான் தெரிந்துகொண்டேன் எத்தகைய விபத்தில் சிக்கிக் கொண்டோம் என்பதை. தாசியும், சாமியாரும் ஒரு ஓரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்! அவர்களைச் சுற்றி, நாலைந்து போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருந்தனர், இவர்களுக்கென்ன வேலையிங்கே, என்று நினைத்தபடியே வாலிபக் கிழவருடன் வந்தேன் வெளியே! அவரைக் கண்டதும், போலீசார் மரியாதை செய்தனர். அதிலிருந்து புரிந்துகொண்டேன், அவர், அவர்களுடைய மேல்திகாரி என்பதை! மாறுவேஷத்தில் வந்து, அந்த வீட்டை, போலீசார் சோதனையிடவேண்டிய அவசியம் என்ன? பகட்டான உடையுடுத்து, பளபளக்கும் நகையணிந்து 'பல' மைனர்கள் வருவார்களாம் இதுபோன்ற வீடுகளுக்கு! அவர்கள் அள்ளித்தரும் பொருள்களை—ஐயோ, பாபம்!—இந்த ஏழைகளும், பெற்றுக்கொள்வார்களாம்; பெரிய மனிதர் தந்தார் எனும் அகமகிழ்ச்சியில். ஆனால், தாசி வீட்டுக்குப் போகும் ஒவ்வொருவனும், தான் தான் பெரிய மனுஷன் என்று சொல்லிக்கொள்ள சலிப்பதில்லையே தவிர, அந்தப் பெரிய மனுஷர்கள் ஒவ்வொருவரைச் சுற்றியும் ஒவ்வொரு 'புராணம்' இருக்குமாம்! காது அறுத்தவன், காசுமாலை திருடியவன், வழிப்பறி செய்தவன், திவட்டித் திருடன்—இப்படிப்பட்டவர்கள், இருப்பார்களாம். அப்படி யாராவது, இந்தத் தாசிக்கும் தொடர்பு இருக்குமோ? அவர்கள் யாராவது கொண்டுதந்த திருட்டுப் பொருள்கள் ஏதாவது அவளுடைய வீட்டிலிருந்ததோ?—இப்படி, அடித்துக்கொண்டது, என்னுடைய மனம். எப்பேற்பட்ட இக்கட்டில் சிக்கிக்கொண்டேன்! வாலிபக் கிழவரோ, தன்னுடைய வேஷத்தை விசியெறிந்துவிட்டு, 'எல்லோரையும் ஸ்டேஷனுக்கு இழுத்துவா,' என்று சொல்லிவிட்டுப்போய்விட்டார். போலிசார், எங்கள் மூவரையும் இழுத்துக்கொண்டு போயினர், போலீஸ் ஸ்டேஷனுக்கு·

"சனி! நீ வந்த வேளையோ, என்னவோ, நாங்கள் மாட்டிக்கொண்டோமே," என்று, திட்டுகிறாள், அந்த அம்மா.

"துக்கிரி! இதைப்போய், காப்பாற்றினோமே. என்ன செய்யப் போறாங்களோ—தெரியலியே......." என்று, முணுமுணுக்கிறார் சாமியார்.

போலீசாரோ, "ஊம்! நடங்க...... என்னம்மா, அங்கேயும் இங்கேயும் திரும்பறே......யாராவது, பழைய 'கிராக்கி' தெரிஞ்சா, பல்லைக்காட்டித் தப்பலாம்னு பாக்கிறீயா — பலிக்காதும்மா, இவருகிட்டே!," என்று வாய்க்கு வந்ததைப் பேசுகின்றனர்.

ஒன்றும் புரியாமல், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனோம். எங்கள் மூவரையும் 'லாக்-அப்'பில் போட்டு பூட்டிவிட்டார்கள்! ஒரு மூலையில் சாமியாரும், இன்னொரு மூலையில் அந்த அம்மாவும் சாய்ந்துவிட்டார்கள். இரும்புக் கதவைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தவள்தான் நான்........! என்னுடைய மனது, பட்டபாடு, சொல்லிமுடியாது. அறையில், அவர்களிருவரும்விட்ட குறட்டைச் சப்தம்தான் எங்கும் கேட்டுக்கொண்டிருந்தது. எங்களைக் காவல் காத்துக்கொண்டிருந்த, ஒரு போலீஸ், அடிக்கடி தூக்கக்கலக்கத்தில் ஏதோ ஊளறியவண்ணம், தூங்கிவிழுந்துகொண்டிருந்தார்! தூரத்தேயிருக்கும், சிக்கல் சிங்காரவடிவேலனின் கோபுரம், மங்கிய நிலவில் தெரிந்தது. அவனிருக்கும் ஊரில்தான், அபாக்கியவதியான நான், அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன் இப்படி! "சிங்காரவேலா......சுப்ரமணியம்..... ......எட்டுகுடி முருகா......எம்பெருமானே....எப்படியாவது காப்பாற்றிவிடடா!," என்று என்னையறியாமலே, கோபுரத்தை நோக்கிக் கும்பிட்டேன். காலை மலர்கிறவரையில், என் உதடுகள், 'முருகா! முருகா!,' என்று உச்சரித்தபடியே இருந்தன. பக்தியோடு, பகவானைப் பூஜித்தால், பலன் கிடைக்குமாமே! அந்த நம்பிக்கை எனக்கு. அதனால், மனதை அங்குமிங்கும் அலையவிடாமல், அவன் நாமத்தையே பஜித்துக்கொண்டிருந்தேன். பலன், என்ன கிடைத்தது தெரியுமோ? பகல், பத்து மணிக்கு, நீதிமன்றத்துக்கு இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தப்பட்டோம்! புறப்படும் போதுகூட, கோயில் கோபுரத்தை நோக்கி நான் கும்பிடத் தவறவில்லை. கோர்டில்கூட, என் உதடுகள், 'முருகா, முருகா!,' என்று உச்சரித்தபடியே இருந்தன. பக்தர்களுக்கு எவ்வளவு கஷ்டங்களைக் கொடுக்கமுடியுமோ அவ்வளவையும் கொடுத்தபிறகுதானே, கடவுள், கருணைபுரிவது வழக்கமாம்! அதுபோல, என் உறுதியையும் சோதிக்கிறாரோ—என்று எண்ணிக்கொண்டேன்.

ஆனால், எனக்குக் கிடைத்த பலன் என்ன தெரியுமோ, கோர்ட்டில்? விபசாரிப்பட்டம்! நான் விபசாரி

யாம்—எனக்கு இதுதான் தொழிலாம் — இப்படி, பல நாட்களாக அந்த வீட்டில் நடைபெற்றுவருகிறதாம்—அது சம்பந்தமாக போலீசாருக்குப் பல புகார்கள் வந்ததன்பேரில் சோதனையிட்டார்களாம்—கையும் களவுமாய் பிடித்துவிட்டார்களாம். என், காதுகளையே, நம்பமுடியவில்லை! கோர்ட்டிலிருக்கும் எல்லோரும் என்னை வெறிக்க வெறிக்கப் பார்த்தார்கள் — அவர்களது பார்வை ஒவ்வொன்றும், என்னைப் பிய்த்துப் பிய்த்துத் தின்பது போலிருந்தது. என்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்த அந்தத் தாசியையும் சாமியாரையும் பார்த்தேன்! அவர்கள், பேசாதுதான், நின்றனர். எனக்கோ, காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்துவது போலிருந்தது............சண்டாளத் தெய்வமே!......என்று, உரக்கக் கூவிவிட்டேன். அதைக் கேட்ட போது, நீதிபதி உள்பட எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்களே தவிர, ஒருவராவது என்மீது அனுதாபம் காட்டவில்லை. சம்பிரதாயமான சடங்குகள் நடந்தது... தண்டனையும் தரப்பட்டது...ரூபாய் -50 அபராதம், தவறினால் இரண்டு வார சிறைவாசம்..........எங்கே போவேன் ரூபாய் ஐம்பதுக்கு? பேசாமலிருந்தேன்! சாமியாரும், தாசியுமோ, தண்டனையைக் கேட்டதும். தேன் குடித்தவர்கள் போல அபராதத்தைக் கட்டிவிடுவதாகத் தெரிவித்தனர். நான்......! பேசாமலிருந்தேன். ரூபாய் ஐம்பதைக் கட்டினால். விட்டுவிடுவார்கள்...எங்கே போவது?......என்று எண்ணிய போது, திடீரென்று எனக்குக் கடிகாரத்தின் ஞாபகம் வந்தது. உடனே, பயமும் வந்தது. ஏது கடிகாரம் என்று கேட்டால்......?

உண்மையைச் சொல்வோம்!

யார், கேட்டு நம்பப்போகிறார்கள்?

அப்படியென்றால்! — என்று குழம்பினேன். கடைசியில், அதனால், எதுவும் பயனில்லை என்று உணர்ந்தேன். அந்த யோசனையையும் கைவிட்டேன். வருவது, வரட்டும்!—எனத் தயாரானேன். போலீசார், என்னை அழைத்துக்கொண்டு ரயிலிலேற்றி ஜெயிலுக்குக் கொண்டுபோயினர்.......பிறகு...... அந்த 'வாசத்தை'யும் அனுபவித்தேன்........நாட்கள் பதினைந்து நகர்ந்தன......வெளியில் வந்தேன்........'எங்கே போகவேண்டும்?' என்று கேட்டார், அதிகாரி.

எங்கே, போவது?
ஏது, என் ஊர்?
என்னபதில் சொல்வது?
மீண்டும், அதட்டினார் அந்த அதிகாரி!

எங்கே போவது?
எவ்வளவுபெரிய கேள்வி!

திகைத்தேன்-மீண்டும்,கேட்டார்.

திருவாரூருக்கு!— என்றேன். திடீரென, அதுதான்கவனத்துக்கு வந்தது. அங்கு போவதற்கு, ஏதோ, எழுதிக்கொடுத்து, ரயிலில் ஏற்றிவிடுமாறு ஒரு ஆளையும் அனுப்பினர்.

ரயில், வந்து சேர்ந்தது, இறங்கினேன். இனிமேல்......!

இந்த ரயிலில் வருவதற்கு, ஏதோ சீட்டுக்கொடுத்தாரே அந்த அதிகாரி அதுபோல், இந்த உலகத்தில் வாழ்வதற்கும் ஒரு சீட்டு இருக்கக் கூடாதா?—என்று எண்ணிற்று, என்னுடைய மனம்.

அப்படியொரு 'சீட்டு' இருந்தால் வாழ்க்கை எவ்வளவு சுலபமாகிவிடும்? அதைக்கொண்டுபோய், ஒரு ஓட்டலில் காண்பிக்கிறோம்—உடனே, வயிறு நிரம்ப சோறு போட்டுவிடுகிறார்கள்; வீடுகளில், காட்டினால், தங்கியிருக்க இடம் கொடுத்துவிடுகிறார்கள்; துணிக் கடையில் காண்பித்தால், 'அம்மா! எதுவேண்டுமானாலும் எடுத்துக் கொள்' என்று சொல்லிவிடுகிறார்கள்......அப்படியொரு சீட்டை, அவதிப்படும் ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தார் கொடுத்துவிட்டால் எவ்வளவு நன்றாகயிருக்கும்?

ரயிலைவிட்டு இறங்கி, சீட்டையும் கொடுத்துவிட்டு, ஸ்டேஷனுக்கு வெளியே வந்தேன். இனிமேல்!

எங்குபோகிறேனோ, எனக்கே தெரியாது. கால்சென்ற வழியே, நடந்தேன்.

ஓடம்போக்கி ஆற்றங்கரை, அதன் தெற்கிலே செல்லும் ஒரு பாதை. அதிலே, நான்! தள்ளாடியபடி போய்க்கொண்டிருந்தேன். விஜயபுரம் கடைத்தெருவைத் தாண்டி, அந்தப்பாதையில் போய்க்கொண்டிருந்தேன்.

ஓரிடத்தில், ஒரு மரப்பாலம், அந்த ஆற்றுக்குப் போட்டிருந்தது. அதைத் தாண்டினாலிருப்பது, மடப்புரம், என்கிற ஊராம்.

ஊருக்குள் போகும் ஆசையே, எனக்கு ஏற்படவில்லை. பாதையின் ஒருபக்கத்திலே, ஒரு பட்டுப்போன ஆலமரமும், அதனருகே ஒருசுமை தாங்கியும் இருந்தது, அந்தச் சுமைதாங்கியின் நிழலில் உட்கார்ந்தேன் நான்! அந்தச் சுமைதாங்கி, களைத்துவருவோர் தத்தமது மூட்டை முடிச்சுகளை இறக்கிவைத்து, இளைப்பாறுவதற்காக எந்த மன்னன் காலத்திலேயோ கட்டப்பட்டது என்னிடம் ஏது, மூட்டைமுடிச்சுகள்? வேண்டுமானால், என் தலையிலும், நெஞ்சிலும் இருக்கும் கவலைகளையும் துக்கத்தையும் இறக்கிவைக்கலாம்! முடியுமா அவைகளை இறக்க? ஏதேதோ சிந்தித்தபடியே, இருந்தேன்.

இந்த உயிர், இருந்து யாருக்கு என்ன பிரயோசனம்?

ஓடும் ஆற்றில் குதித்துவிட்டால்......! அதுவே, சரி என்று, ஆற்றோரம் சென்று பார்த்தேன். மேடாகிப்போன என் வாழ்க்கையைப்போலவே, ஓடம் போக்கியும் மேடாகயிருந்தது — அதில் குதித்தால், உயிர் நிச்சயம் போகாது!— என்று தெரிந்தபோது, என்னை அறியாமலே எனக்குச் சிரிப்பு வந்தது.

திரும்பினேன்! எப்படி உயிரை விடுவது? இதென்ன உலகம் பாருங்கள்—என்னைப் போன்றவர்களுக்கு இந்த உலகத்தில் உயிர்வாழ்வதென்றாலும் பெரிய சங்கடமாயிருக்கிறது! உயிரை விடுவதென்றாலும் பெரிய பிரச்னையாகயிருக்கிறது! — என்று, எண்ணினேன். மீண்டும், சிரிப்பு வந்தது. சிக்கல் தீர்ப்பதுபோல, அப்போது, எதிரேயிருந்த ஆலமரத்தின் கிளையொன்று தென்பட்டது. அது, வளைந்து, சுமைதாங்கியின் பக்கமாகயிருந்தது. பட்டமரத்தின் கிளைதான்! நானும், ஒருவகையில் பட்டுப்போன மரம்தானே?

சுமைதாங்கிமீது ஏறி, சேலையை வீசி,தூக்குப்போட்டுக்கொண்டு...!

திட்டம், தயாராகிவிட்டது. ஏறினேன், சுமைதாங்கியின்மீது! இன்னும் சிறிது நேரத்தில், உயிர்போய்விடும் — எங்கோ பிறந்து, எங்கெங்கோ அலைந்த நான், இந்த இடத்திலே தொங்கப்போகிறேன்!

இப்படி எண்ணியவண்ணமே, ஏறினேன்,துணியையும் வீசியெறிந்தேன். துணி, கிளைமீது விழவில்லை. எனவே, மீண்டும் வீசுவதற்காக, குறிபார்த்தேன். அப்போது, நான் கண்ட காட்சி......!

[வளரும்]

Valavan



# "அமைதியின் உறைவிடம்"

## அறிஞர் சுவைட்சர்

★

'உலகப் பெரியார்', 'நமது காலத்திய அறிஞர்', 'உண்மையான கிறித்தவர்', '20ம் நூற்றாண்டின் முனிவர்' என்றெல்லாம் உலக மக்களால் போற்றப்படுகிறார். 1952ம் ஆண்டிற்குரிய நோபல் அமைதிப் பரிசு அவருக்கு 1953 நவம்பர் 1ம் நாள் வழங்கப்பட்டது. அதுவரை அவரது பெயர் பெரும்பாலோர்க்குத் தெரியாததாகவே இருந்துவந்தது. மூன்றாண்டுகட்கு முன் நியுயார்க் கலைக் கழகம், டாக்டர் சுவைட்சரை 'உலகச் சிக்கல்களுக்குச் சிறந்த பரிகாரம் காட்டவல்ல ஒரே மனிதராகத்' தேர்ந்தெடுத்தது.

பிரஞ்சு வட ஆப்பிரிக்காவில் டாக்டர் அல்பர்ட் சுவைட்சர் என்ற 'சிவனடியார்' ஒருவர் வாழ்கின்றார். அவர் மாதொரு பாதியனைச் சிவன் என வழிபடுபவரல்லர்.

ஆனால், அவரது மருத்துவப் பணி உலகப் புகழ் படைத்தது. பிரஞ்சு வட ஆப்பிரிக்காவில் லாம்பர்ன் என்ற சிற்றூரில்தான் அவரது மருத்துவ இல்லம் அமைந்திருக்கிறது. அது அமைந்துள்ள இடம் இயற்கை எழிலின் உயிரோவியமாய்த் திகழ்கிறது.

சுவைட்சர், உலகப் பெரியார்களுள் ஒருவர் என்பதை மறுப்பாரில்லை. அவர், 'அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும் தோற்றமும் படைத்தவர்' எனச் சுருங்கச் சொல்லிவிடலாம்.

அவர் மெய்ப்பொருளறிஞர், மருத்துவ வல்லுநர். அவர், இசைக் கலைபற்றியும் ஏசு பெருமான்பற்றியும் சிந்தனையாழமிக்க புத்தகங்கள் பல எழுதியிருக்கிறார். பியானோ இயக்குவதிலும் அதை உருவாக்குவதிலும் அவர் மாமேதை. வெப்பமண்டல விலங்கியல், மாந்தனூல், வேளாண்மை ஆகியவற்றில் மற்றவர்க்கு வரம்பான அறிவினர். கைதேர்ந்த தச்சர்: கொற்றர்; ஆற்றல் சான்ற விலங்கு அறுவை மருத்துவர்; படகு கட்டுபவர்; குறிப்புப் படம் வரைபவர்; பொறிச் செப்பனீட்டாளர்; மருந்துக் கலைவல்லார்; தோட்டக் கலைஞர்.

டாக்டர் சுவைட்சர் 1875ம் ஆண்டு ஜனவரி 14ம் நாள் அல்சாசில் பிறந்தார். அவருடைய பெற்றோர் சுவிஸ்காரர்கள். சுவைட்சர் தமது இன்றைய உடல் கட்டுக்கு நேர்மாறாகத் தம் குழந்தைப் பருவத்தில் 'நோஞ்சலாகவே' இருந்தார். இதனால்தான், அவர் தம் இளம்பருவத்தில் தமக்கு மிகக் கடினமாக இருந்த ஈப்ரூபோன்ற கடும் பாடங்களில் தம்மை வல்லுநராக்க உறுதிபூண்டு அவ்வாறே ஆகிவிட்டார். இத்தனைக்கும் காரணமாயிருந்தது அவர்பால் ஆழ வேரூன்றிப் பரவியிருந்த வலிய கடமை யுணர்வேயாகும்.

டாக்டர் சுவைட்சர், தம் இளமைக் காலத்தில் நாற்பெருந் துறைகளில் ஈடுபட்டிருந்தார். அவர், ஸ்டிராஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் மெய்ப்பொருள் பயின்று மெய்ப்பொருள் மேதை என்ற பட்டம் பெற்றார். 1900ல் தமது 25ம் அகவையில் சமயம் பயின்று, ஸ்டிராஸ்பர்க்கில் உள்ள நிக்கோலாஸ் கிருத்தவக் கோவிலில் துணைக் குருவானார். இசைக் கலை கற்று இசைவல்லாராகத் தொழில் நடத்தி வந்தார். தமக்கு 26 அகவை ஆவதற்குள் மெய்யுணர்வு, சமயம், இசை ஆகிய துறைகளில் மேதை (டாக்டர்)ப் பட்டம் பெற்றுவிட்டார்.

அவர் தம் 21ம் அகவையில் பின்வருமாறு உறுதி பூண்டார்.எனக்கு 30 ஆண்டு நிறைவுறும்வரை நான் அறிவியலுக்காகவும் கலைக்காகவும் வாழவேண்டும். 30-ம் அகவை நிறைவுற்ற பின்னர் எனது வாழ்நாளின் இறுதிகாறும் மனிதகுலத்திற்கு மேலும் தொண்டாற்றுவதற்காகவே நான் வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால்தான் உலகில் நான் வாழ்வது முறைமையாயிருக்கும்.

இவ்வாறு சூளுறவு செய்துகொண்ட டாக்டர் சுவைட்சர் தாம் 30-ம் ஆண்டை எய்து முன்னரே ஐரோப்பாவிலுள்ள மதிநலமிக்க அறிஞர்களில் ஒருவராக மதிக்கப் பெற்றுவந்தார்,

டாக்டர் சுவைட்சர் தமக்கு 30 அகவை ஆனவுடன் தமது இளம்பருவச் சூளுறவுப்படி, தமது வாழ்நாளின் எஞ்சியகால முழுவதையும் மருத்துவப் பணியில் கழிப்பதற்காகத் தம்முடைய பிற ஈடுபாடுகள் அனைத்தையும் திடீரெனத் துறந்து மருத்துவப் பயிற்சி மேற்கொண்டார்.

ஏன் மருத்துவத் துறையில் ஈடுபட்டார்? 'பேசிப்பேசிப் போதுமென்றாகிவிட்டது. இனிச் செயல் வேண்டும்' என்று அவரே சொல்லுகிறார். தமது மருத்துவத் தொண்டைத் தொடங்குவதற்கு லாம்பர்னையே தக்க இடமாகத் தேர்ந்தெடுத்தார். ஏன்? அதுதான் ஆப்பிரிக்கா முழுவதிலுமே அறவே போக்குவரவு வசதியற்றதாயும் முதுபழங்கால நிலையினதாயும், பேரிடர் மிக்கதாயும் இருக்கிறது. அது மருத்துவத்தையே அறியாததாயும் இருந்தது. அங்குதான், உலக மக்களால் "நரஊண் மனிதர்" (மனிதனைத் தின்னும் மனிதர்) எனக் கருதப்படுகிற ஒரு மக்கட் கூட்டத்தினர் வாழ்கின்றனர். அவர் தாமாகவே தேர்ந்தெடுத்துக்கொண்ட இந்த இன்னல்மிக்க பொறுப்பைக் கடந்த 40 ஆண்டு காலமாக உறுதி தளராமல் நிறைவேற்றி வருகின்றார்.

உலகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவர் அருமையான மருந்தொன்று சொல்லுகிறார். அது என்ன? "உயிரை—**உயிர் அனைத்தையும்—மதிக்கவேண்டும். ஏனெனில் அது வாழ்கிறது**" என்பதுதான் அந்த மருந்து.

அவர் இந்த மருத்துவத் தொண்டில் ஈடுபடத் தொடங்கிய காலை அவருடைய உறவினரும் நண்பரும், "ஐயோ அது இடர் நிறைந்த இடமன்றோ, அங்கு செல்லின் உயிருக்கே ஊறு வந்துவிடுமே" என்று சொல்லி அவரைத் தடுத்தனர். ஆனால் தாம் பெற்றுள்ள இன்பத்திற்கு ஏதாவதொரு கைம்மாறு செய்யவேண்டுமெனத் தாம் உணர்வதாகப் பதிலளித்த அவர் தமது உறுதியை நிலைநாட்டினார்.

அவர் 1912ல் திருமணம் செய்துகொண்டார். அவரது மனைவி ஒரு யூத மாது. புகழ்படைத்த வரலாற்

ருசிரியரின் புதல்வியாகிய அவர் அமெரிக்காவில் தம் கணவருக்குத் தாமும் உதவியாயிருத்தற் பொருட்டு "உழைச் செல்வாள்" (மருத்துவத்தாதி) தொழிலைக் கற்றுக் கொண்டார். இவ்விருவரும் தாங்கள் 1913ல் லாம்பர்னுக்குப் போய்ச் சேர்ந்தபோது அங்கு நிலவிய நிலைமைகண்டு திடுக்கிட்டனர். இன்னமும் கூட அந்த அதிர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. அப்பகுதியில் மாந்தர் வாழத்தக்க ஓரங்குல இடத்தையும் பொல்லாத விலங்குகளும் மலைப்பாம்புகளும் மலிந்த பெருங்காட்டை அழித்தே அமைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆறுகளிலோ முதலைகள் மீன் குஞ்சுகள் போலத் திரிகின்றன.

டாக்டர் சுவைட்சர் தமது மருத்தில்லத்தை கட்டாந்தரையில் வெறுங்கையாலேயே கட்டினார். நாளடைவில் தொழில் வளர்ந்துவிடவே குடிசைகள் மிகச்சிறியவையாகிவிட்டன. அதனால் அவர் இந்த மருத்தில்லம் முழுவதையுமே புதுப்பிக்க வேண்டியிருந்தது. தொழுநோய் முதல் யானைக்கால் நோய் பல்வகைப் பிணிகளால் துன்புறுகிற ஆப்பிரிக்க நோயாளிகளுக்கு மருத்துவம் பார்ப்பது இலகுவான வேலையன்று. அவர்களில் சிலர் சில சமயங்களில் உடம்பில் பூசுவதற்குரிய மருந்தைக் சாப்பிட்டுவிடுவார்கள். வாரக் கணக்காய்ச் சாப்பிடவேண்டிய மருந்தை ஒரே வீழுங்கில் விழுங்கிவிடுவார்கள். அல்லது தங்களுடன் இருக்கும் பிற நோயாளிகளை நஞ்சிட்டுக்கொல்லமுயன்று விடுவார்கள். இத்தனை தொல்லைகள் இருந்தாலும் டாக்டர் சுவைட்சர் லாம்பர்ன் மீது முன்போலவே இன்னமும் அளவற்ற பற்று வைத்திருக்கிறார்.

தற்போது லாம்பர்னுக்குச் செல்ல வானூர்தி வசதி இருக்கிறது. அதைப் பிரஞ்சு அரசினர் நடத்துகின்றனர். லாம்பர்னில் எம்மா என்ற அல்சேஷியத்தாதி பொருவர் சுவைட்சர் மருத்தில்ல முழுமைக்கும் கண்காணிப்பாளராகவும் சுவைட்சரின் மொழி பெயர்ப்பாளராகவும் இருக்கிறார். அவர் 1925-லிருந்து சுவைட்சருடன் தொண்டாற்றி வருகிறார். சுவைட்சர் ஜெர்மன் அல்லது பிரஞ்சு மொழியில் பேசுவதை எம்மா தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லுகிறார்.

ஆப்பிரிக்கர்களுடன் பொழுது போக்குவது சுவைட்சருக்குப் பெரிய, சிக்கலான வேலையாக இருக்கிறது. ஒரு சமயம் அன்பு பாராட்டுவார்; மறுசமயம் அவருக்கு ஒன்றுமே புரியாது. ஆத்திரம் வரும்; பின்னர் நம்பிக்கைக்கும் மனச்சோர்வுக்குமிடையே ஊசலாடுவார். ஆப்பிரிக்கர்களில் பலர் குறிக்கோள் அற்றவர்கள். பொறுப்புணர்ச்சி யற்றவர்கள். உழைப்பின் வெற்றி கண்டு பூரிக்கும் உள்ளம் அவர்களிடம் இல்லை. வேலை முடிந்த பின்னர் பொழுதை நல்ல முறையில் கழிக்க அவர்களுக்கு வழியெதுவும் தெரியாது என்று சுவைட்சர் சொல்லுகிறார். ஆயினும் ஆற்றுக்குச் சென்று மீன் பிடித்தால் என்ன என்று அவர்கள் நினைப்பதில்லை. கொஞ்சம் படித்துவிட்டால் உடனே நகரங்களுக்குச் சென்று "கையச்சுப் பொறியாளராக" (டைப்பிஸ்டுகள்) வேலையிலமர முயன்றுவிடுகின்றனர். ஆனால் தச்சு வேலையில் அல்லது தோட்டவேலையில் தேர்ச்சி படைத்த ஒருவரைக்கூட இவர்களிடையே காணமுடியாது என்று சுவைட்சர் சொல்கிறார். "இந்த ஊரில் நான் ஒருவன்தான் ஐயா, குடியானவன்" என்று அவர் வேடிக்கையகத் தெரிவிக்கிறார்.

சுவைட்சர் எல்லா வகைப் பழமரங்களையும் வளர்த்துவருகிறார். ஆனால் பழமரத்தைப் பயிரிடுகிற ஒருவன் அது கனிதரத்தொடங்கு முன்னர் இறந்துவிடுவான் என்ற மூடநம்பிக்கை ஆப்பிரிக்க மக்களிடம் நிலவுவதால் இந்தப் பழமரங்களில் பெரும்பாலானவற்றைச் சுவைட்சர் தாமாகவேதான் பயிரிட நேர்ந்தது.

சாப்பாடு முடிந்த பின்னர் டாக்டர் சுவைட்சர் உணவுப் பொருளை எடுத்துச் சென்று தாம் வாஞ்சையோடு வளர்க்கிற மான்களுக்கு ஊட்டுகிறார். பிறகு நள்ளிரவு வரை எழுத்து வேலையை அல்லது கடிதங்களுக்குப் பதில் எழுதும் வேலையைக் கவனிக்கிறார். ஒரு சமயம் அவர் போர்டோ என்ற இடத்தில் கப்பலேறியபோது அவர் வைத்திருந்த கடிதச் சுமையைக் கண்டு சுங்க அதிகாரிகள் திடுக்கிட்டுவிட்டனர். பதில் எழுதுவதற்காக சுவைட்சரால் எடுத்துச் செல்லப்பட்ட அக்கடிதங்கள் 4 சாக்குகளில் நிறைந்திருந்தன!

இத்தகைய மாமேதையாகிய, ஊழியத்திலேயே இன்பங்காண்கின்ற சான்றோராகிய டாக்டர் சுவைட்சர் தமிழர் தம் விழுமிய நூலாகிய திருக்குறளை மனிதச் சிந்தனையிலேயே சிறந்தது எனப் போற்றுகிறார் என்றால், அது நமக்கெல்லாம் எத்துணைப் பெருமை என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

டாக்டர் சுவைட்சர் திருக்குறளை ஜெர்மானிய மொழியில் படித்து விரிவாக ஆராய்ந்து அதில் தாம் கண்ட அரிய உண்மைகளை வியந்து பாராட்டித் தம் நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார். "இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்" என்ற நூலில் அவர் எழுதியிருப்பது வருமாறு:—

"திருக்குறளுக்கும் அதற்கு 4 நூற்றாண்டுகட்கு முன்னர் தோன்றிய மனுநீதிக்கு மிடையே எத்துணைவேற்றுமை' மனுநீதியில், பிராமண உணாச்சி ஓங்கி நிற்பது காரணமாக, உலகம், வாழ்க்கை ஆகியவற்றை நம்பும் போக்கிற்கு உலகம், வாழ்க்கை ஆகியவற்றை மறுக்கும் போக்கொடு பெயரளவில் இடமளிக்கப்படுகிறது. ஆனால் திருக்குறளிலோ எனில் உலகம், வாழ்க்கை ஆகியவற்றை மறுக்கும் போக்கு, வானிலே சேய்மைக்கண் தோன்றும் முகிலைப் போலவே இருக்கிறது. குறளில் 240 பாக்களில் (காமத்துப்பாலில்) உலகியலோடுபட்ட காதல் புகழப்படுகிறது.

மனுநீதியிற் போலவே குறளின் அறநெறியிலும் கைம்மாறு உண்டு என்ற கருத்து ஓரளவு காணப்படுகிறது. அறநெறியைக் கடைப்பிடிப்பவன் நல்ல மறுபிறப்பு எய்துவான் அல்லது இனிப்பிறவாப் பெரும்பேறு எய்துவான் என்ற காரணத்தால் அறநெறி போற்று

### அதிகம் இங்கே!

புரோகிதர்கள் பூசாரிகள் மடாதிபதிகள் குருக்கள் சாமியார்கள், கன்னித் துறவிகள் சாதுக்கள் மற்றும்கோயில் மதத்துறை ஊழியர்கள் இந்தியாவில் மொத்தம் 369474. இதில் தென் இந்தியாவில் 81502. கிழக்கிந்தியா 80287. வட இந்தியா 59133. மேற்கிந்தியா 52959. மத்திய இந்தியா 42600. வடகிழக்கிந்தியா 52971. அந்தமான் நிகோபர் 22.

மின் என வலியுறுத்தப்படுகிறது. நன்னெறியில் செல்பவன் இவ்வுலகில் நல்வாழ்வு வாழ்வான், தீயவழியில் செல்பவன் துன்பத்தில் உழல்வான் என்ற பொதுக் கருத்தும் காணப்படுகிறது. ஆயினும் குறளில் பேசப்படுகிற அறநெறி, பிராமணத்துவம், பௌத்தமதம், பகவத்கீதை ஆகியவற்றில்போல, "கைம்மாறு கருதி அறநெறியில் ஒழுகுக" என்ற கருத்தையே முற்றிலும் சார்ந்ததாக இருக்கவில்லை. கைம்மாறு கருதாது நன்மை செய்தல் வேண்டும் என்ற வலியுறுத்தலைக் குறளில் நாம் பரக்கக் காண்கிறோம். இக்கருத்து பல குறட்பாக்களில் ஒளிவீசுகிறது.

"நல்லாறு எனினும் கொளல் தீது. மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று"; "கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு, என்னாற்றுங் கொல்லோ உலகு?"

செயலாற்றி வாழ்வது உலக யாப்புறவு (நியதி) என்பது தான் அத்தகைய வாழ்க்கைக்குப் பகவத்கீதை காட்டும் காரணமாகும். ஆனால் திருக்குறளோ, அறஞ்செய்தற்காகவே மனிதன் வாழ வேண்டும் என்பதையே அவ்வாழ்க்கைக்கு முறைமையாகக் காட்டுகிறது. இக்கருத்து பகவத்கீதையின் கருத்தைவிட எத்துணை உயர்ந்தது? நலஞ்செய்தற்கே மனிதன் உழைத்துப் பொருள் தொகுக்கவேண்டும் என்கிறது குறள். "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற்பொருட்டு"; தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு, வேளாண்மை செய்தற்பொருட்டு."

"பகவத்கீதையின் கருத்துப்படி சாதித்தொழில் மட்டும்தான் கடமையாகும். குறளின் குருத்து அதுவன்று. எவை நல்லனவோ அவற்றையெல்லாம் செய்தலே கடமை என்று அது சொல்லுகிறது. உழைப்பிலே மகிழ்ச்சியுண்டு என்பதுபற்றிய மூதுரைகளே—இந்தியர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கமுடியாத மூதுரைகளே —குறளில் காணப்படுகிற வாழ்க்கை நம்பிக்கையின் வலிமைக்குச் சான்றாக விளங்குகின்றன. 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன், மெய்வருத்தக் கூலி தரும்; 'இன்னாமை இன்பம் எனக்கொள்ளின் ஆகும் தன், ஒன்னார் விழையும் சிறப்பு'.

புத்தரும் பகவத்கீதையும் சொல்வது போலவே, உலகப்பற்றிலிருந்து, பகைமையிலிருந்து விடுபட்ட உள்ளம் வேண்டுமென்று திருக்குறளும் சொல்லுகிறது. அவர்களைப் போலவே குறளும் கொல்லக் கூடாது, ஊறு செய்யக் கூடாது என்று சொல்லுகிறது. வாழ்க்கை மறுப்பினால் விளைகின்ற அறப்பயன் அனைத்தையும் அது உள்ளடக்கி நிற்கிறது.

ஆனால் குறளில் இந்த அகச் செம்மையுடன் புனித அன்பும் இடம்பெற்றிருக்கிறது. 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர். அன்புடையார், என்பும் உடையர் பிறர்க்கு; 'அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண், வற்றல் மரம் தளிர்த்தற்று' 'புறத்து உறுப்பெல்லாம் எவண் செய்யும் யாக்கை, அகத்துறுப் பன்பிலவர்க்கு'; 'பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின், நன்மை கடலிற்பெரிது' 'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன், பெற்றான் பொருள் வைப்புழி' 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம், பூரியார் கண்ணும் உள

அறநெறி வழி வாழ்தலே மனித வாழ்க்கையின் குறிக்கோள் எனத் திட்பமுறச் செப்புகிறது திருக்குறள். மனிதன் உலகில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றிக் குறள் கூறும் கருத்துக்களின் தனிச் சிறப்பு அவற்றின் மேன்மையும் நல்லுணர்வுமேயாகும்.

இத்தகைய "வானளாவிய" மெய்யுணர்வு பொதிந்த மூதுரைத் தொகுப்பை உலக இலக்கியத்திலேயே வேறெங்கும் நாம் காணமுடியாது என்று சொல்லிவிடலாம்.

திருக்குறளை இவ்வாறு பாராட்டுகிற டாக்டர் சுவைட்சர் இதற்குச் சான்றாக பல குறட்பாக்களைத் தமது நூலில் எடுத்துக் காட்டுகிறார்.

—(த. மு.)

# அண்ணனைப்பற்றி!

அண்ணனைப்பற்றி தங்கை எழுதியிருப்பது, இது.

உலகம் போற்றும் பண்டித நேருவைப்பற்றி அவர் தங்கை கிருஷ்ணா ஹத்தீசிங் என்பார், அண்மையில் தீட்டியது.

'லேடிஸ்ஹோம்ஜர்னல்', எனும் ஆங்கில ஏட்டில் வெளிவந்த இக் கட்டுரை, அகில உலகத்திலும் பரவியிருக்கிறது. தீட்டுவது, தங்கையல்லவா?- நீங்களும் படித்துப்பாருங்கள்:-

"வெளிநாட்டு நிருபர் ஒருவருக்கு நேருவின்பேட்டி சுலபமாய்க்கிடைத்து விடுமென்பதும் ஆனால் இந்திய நிருபருக்குக் கிடைப்பது அரிது என்பதும் பிரசித்தம். எந்த எழுத்தாளராவது (வெளிநாட்டுநிருபராயினும்சரி, வேறு நிருபராயினும் சரி,) நேருவின் பேச்சைக் குறைகூறிவிட்டால் அவர் நேருவுக்கு விரும்பத்தகாத ஆளாகிவிடுவார் என்று சொல்லலாம். துரதிர்ஷ்டவசமாக நெடுங்காலத்திய நண்பர்கள் விஷயத்திலும் கூட நேரு இவ்வாறே நடந்து கொள்கிறார்."

*

"நேரு மொத்தத்தில் இன்னமும் வேறு எந்த நாட்டையும் விடப் பிரிட்டனையே அதிகமாய்ப் பாராட்டுகிறார். பிரிட்டிஷ் ஆட்சியில் நாம் பட்ட துன்பத்தை நினைவுகூர்கிறவர்களுக்குஇது புரியாததாகவே இருக்கிறது. நேரு தம்முடன் உரையாடியுள்ள அமெரிக்கர்களில் சிலரிடம் மதிப்பு வைத்திருக்கிறார். அவர்களைப் பாராட்டுகிறார். ஆனால் அமெரிக்கர்களிடையே அவருக்கு நண்பர் யாருமில்லை."

"அதிகாரம் நேருவைக் கெடுத்து விடவில்லை. ஆனால் அது அவரிடம் ஓரளவு கடுகடுப்பை உண்டுபண்ணி விட்டது"

"சர்வாதிகார தோரணையில் நடந்து கொள்ளும் போக்கு அவரிடம் எப்போதுமே சிறிது இருந்துவந்தது. ஆனால் இப்போது அவர் தம்மைப்பற்றிய குறைகூறலைச் சகித்துக் கொள்ளமாட்டார். ஆலோசனையைக்கூட மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளமாட்டார்."

*

நாட்டைத் தாமே தனித்து ஆள்வதனால் அவர் இரக்கம்படைத்தசர்வாதிகாரியாகிவிட்டாரா என்பது அவரவர் அபிப்பிராயத்தைப் பொறுத்த விஷயம். நாம் சொல்லக்கூடியதெல்லாம் அவர் இப்போது பழைய ஜவஹராக —அன்பும் அனுதாபமும் படைத்த எந்தக் குறையையும் உடனடியாய்த் தீர்த்துவைக்கக்கூடிய, குற்றவாளியை அப்போதே தண்டித்துவிடக்கூடிய ஜவஹராக இருக்கவில்லை என்பது தான்.

*

இந்தக் கஷ்ட காலத்தில் அவர் தாம் இந்தியாவைச் செவ்வையாக வழி நடத்திச் செல்லவல்ல ஒரே மனிதராக உலகின் கண்ணுக்குத்தோன்றுகிறார் என்பதில் ஐயமில்லை. எனினும் மக்களின் மிதமிஞ்சிய பாராட்டு அவரைக் கெடுத்துவிடும். அது அவருக்கும் இந்தியாவுக்கும் ஆபத்தாக முடிந்துவிடும். "இதை (பாராட்டை) அடக்கவேண்டும். நமக்கு சர்வாதிகாரிகள் வேண்டா" என்று அவரே தெரிவித்திருக்கிறார். ★

3-ம் பக்கத் தொடர்ச்சி

போக்கக் கூடியதாக அமைந்துவிட்டதாம்.

அப்படிக் கலக்கும் நதிகளின் பெயர்கள் எவை? கூறவில்லை அந்தப் பத்திரிகை! தெரியாததால் அல்ல, முடியாததால்! ஏதாவது நதிகள் தனுஷ்கோடிக்குப் பக்கத்தில் இருந்தால்தானே தெரிந்து கூற!

அந்தப்பகுதியில் ஒரே ஒரு நதி மட்டும் ஓடுகிறது.

அதன் பெயர் வைகை!

இந்த நதியின் மகத்துவம் பலருக்குத் தெரியாது, தனுஷ்கோடியில் கோடிக்கணக்கான நதிகள் போய்க் கலப்பதைக் கண்டு பிடித்த அந்தப் பத்திரிகை, இந்த நதியைப்பற்றி ஏதும் கூறவில்லை. தெரியாததாலோ அன்றி வேறு காரணத்தாலோ, நாம் அறியோம். எனவே, வைகை நதியைப்பற்றி நாம் அறிந்ததை அந்தப் பத்திரிகையின் சார்பில் இங்கு வெளியிடுகிறோம்.

இந்த வைகை நதி இருக்கிறதே' இது, மற்றெல்லா நதிகளையும்விட ஒரு தனிமகத்துவம் பெற்றதாகும். பரமசிவனுடைய ஜடாபாரத்தைத் தனது உறைவிடமாகக் கொண்டுள்ள கங்கைக்குக்கூட வைகைக்கிருக்கும் மதிப்புக் கிடையாது. உலகிலுள்ள எந்த நதியும், அதன் உற்பத்தி எந்த இடமாயினும் சரி, கடைசியில் அது கடலில் போய்க் கலப்பதைவிட வேறுவழியில்லை. ஆனால், நாம் கூறும் இந்த வைகைநதிக்குமட்டும் இது விதிவிலக்காகும். அதற்குக் கிடைத்த வரப்பிரசாதம் அப்படி! விஷயத்தைவளர்த்துக் கொண்டு போவானேன்?

வைகை நதி கடலில் போய்க் கலப்பதில்லை.

இப்படியொரு வரத்தை இந்த வைகை நதி பெற்றிருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. மற்றெந்த நதிகளுக்குமில்லாத இந்தத் தனிச் சிறப்பு வைகைக்குமட்டும் உண்டென்று பேசி மகிழ்வதில் பக்தகோடிகளுக்கு ஒரு தனி ஆசை. ஏன் அவர்களின் ஆசைக்குக்குறுக்கே நாம் நிற்கவேண்டும்! ஆனால், ஒன்று மட்டும் கூறுவோம்; பெருமழை காரணமாகக் கரை புரண்டோடும் நிலையை இந்த வைகை நதியும் பெற்றுவிட்டால், அந்தப் பெருவெள்ளம் முழுவதும் எங்காவது ஒரு இடத்தை நாடி ஓடித்தங்கித் தானே ஆகவேண்டும்! அப்படிப்பட்ட இடம் சமுத்திரமல்லாத வேறு இடமாக எப்படியிருக்க முடியுமென்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை அந்தநதியில் வந்துசேரும் வெள்ளப்பெருக்கு, கடலை அடைவதற்குள் பலவழிகளிலும் சிதறுண்டு, சமுத்திரத்தில் போய்ச்சேரமுடியாமல் போய் விடுகிறதென்று கூறினால், அதை யாரும் ஒப்புக்கொள்ளமறுக்கமாட்டார்கள். ஆனால், வைகைநதி கடவுளின் அருளால் கடலில் கலப்பதில்லைஎன்று கூறப்படுவதை எந்தக் கபோதியும் நம்பமாட்டான். வெள்ளம் பள்ளத்தையே நாடும். இது இயற்கை. இதனைத் தடுக்க, ஆண்டவன் அருளாலும் அடியார்களின் பதிகத்தாலும் முடியாது. முன்பொரு காலத்தில், கூன்பாண்டியன் என்ற மதுரைமன்னனுக்கேற்பட்ட வெப்ப நோயைத் தீர்த்துச் சமண முனிவர்களைக் கொன்றொழிக்கும் பெரும் 'அருட்பணி'யைச் செய்தசம்பந்தர் இட்ட ஒரு ஏடு (ஓலை) இந்த வைகையில் எதிர் நீச்சடித்துக் கொண்டு பன்னிரண்டு கல் தொலைவு போய்த் தங்கி நின்றதென்று ஒரு பொருந்தாப் புளுகு கூறப்பட்டதே, அந்தப்புளுகு இந்தப் புளுகிடம்பிச்சை வாங்கவேண்டும் போல் இருக்கிறது. இது எப்படியோ போகட்டும்; நமக்கேன் இப்போது இந்த ஆராய்ச்சி எல்லாம்!

கோடிக்கணக்கான நதிகள் தனுஷ்கோடியில் போய்க் கலக்கின்றன என்று கூறப்படுவது எவ்வளவு தாங்க முடியாத பளுவுள்ள பெரிய பொய் மூட்டை என்பதை எடுத்துக்காட்டவே அந்த வைகையைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு இங்கு எழுத நேர்ந்தது.

ஆனால், அந்தப் பத்திரிகை கூறுவதில் ஒரு உண்மையை மட்டும் யாராலும் மறுக்கமுடியாது. அதாவது எல்லா நதிகளும் கடைசியில் கடலில் போய்க் கலக்கின்றன என்று கூறுவதைத்தான் குறிப்பிடுகிறோம். கடல் என்றால், தனுஷ்கோடியில்தான் இருக்கிறது—வேறெங்கும் கிடையாதென்ற பொருளில், "நதிகள் எல்லாம் சமுத்திரத்தில் கலப்பதால், தனுஷ்கோடியில் ஸ்நானம் செய்பவர்களின் பாபங்கள் எல்லாம் நீங்கப்பெற்றுப் புண்ணியம் உண்டாகிறது" எனறு அந்தப் பத்திரிகை கூறுவதைக் கண்டு யாரால்தான், இதன் அறிவு இருந்தவாறு மிக நன்று நன்று என்று எள்ளிநகையாடாதிருக்க முடியும்?

நதிகள் எல்லாம், அவைதம் எண்ணிக்கை, மக்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்தாலும், அல்லது குறைவாக இருந்தாலும், கடைசியில் கடலில்போய்க் கலப்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அப்படிக் கலக்குமிடம் தனுஷ்கோடியைத் தவிர வேறெங்கும் இல்லை என்று வெற்றுரவாரம் போடுவதேன்?

ஜெகத்குரு சங்கராச்சாரியார் என்ற பெயரால் ஒருவர் நம் நாட்டில் அழைக்கப்படுகிறார் அல்லவா? அதன் பொருள் என்ன? ஜெகம் என்றால் உலகம்; குரு என்றால் தலைவன் அல்லது ஆசிரியர். அதாவது உலகத்தவர்க்கெல்லாம் சங்கராச்சாரியாரே குரு என்று பொருள். உலகம் என்றால் இந்தத் துணைக் கண்டத்தைத் தவிர வேறெதுவும் கிடையாது என்றஎண்ணத்துக்குமேல் எள்ளளவும் செல்லமுடியாத ஏமாளிகளாக இருந்தவர்களின் கற்பனையில் உண்டான ஜெகத்குரு சங்கராச்சாரியாரை, விரிந்து பரந்து காணப்படும் உலகத்தின் அளவை அறிந்தபின்னரும், அந்த மனிதரை, ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் என்று அழைத்தால் போதுமென்றில்லாமல், இன்றும்ஜெகத்குரு என்றே அழைக்கும் பெரியவர்கள் வாழும் நாட்களில், நதிகள் எல்லாம் இவ்வுலகில் பரவிக்கிடக்கும் கடற்பரப்பை எல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டுத் தனுஷ்கோடியை மட்டுமே, தாம் கலக்கும் இடமாகக் கொண்டுள்ளனவென்று கூறுவதை மட்டும் நம்பமாட்டார்களா என்ன!

இயற்கையாகவே கடலரிப்பு ஏற்படுவதன் காரணமாகக் கடலுள் மூழ்கப் போகும் தனுஷ்கோடியை கடவுளருளால் காப்பாற்றிவிடலாமென்றெண்ணுபவர்களுக்கு இவை எல்லாம் ஜம் மாத்திரம்!

இதுமட்டுமல்ல, கடலரிப்பைத் தடுக்க எந்தவிதமான பிரயத்தனத்தாலும் முடியாதென்றும், அதனைத் தடுக்க ஒரே ஒரு பரிகாரம், கடவுள் பஜனையும் உண்ணாவிரதமும்தான் என்றும் கூறுமளவுக்கு விசாலமான அறிவைப் பெற்ற விவேகிகள் இன்றைய சர்க்காரின் அரசியல் விவகாரங்களை நிர்ணயித்து மக்களுக்கு நன்மைகள் பல செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும்போது நாட்டுக்கு இனி என்ன குறை!

★

## தீக்குச்சி வரி

(1952-53) ஓராண்டில், தீக்குச்சி மீது விதிக்கப்பட்டுள்ள வரிமூலம் டில்லிக்கு 9 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

நமது பகுதியில், தீக்குச்சி செய்வது குடிசைத் தொழிலாக இருக்கிறது. டில்லிக்குக் கிடைக்கும் தீக்குச்சி வரியில் பெரும்பகுதி இங்கிருந்து[illegible]ன் செல்கிறது.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram.